வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.07.2023 வியாழக்கிழமை | இதழ் : 229 | பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# கனடாவின் அமைச்சரவையில் முதல் தடவையாக ஈழத்தமிழர்!

## ஹரி ஆனந்தசங்கரி நேற்று பதவியேற்பு



ஸ்காப்ரோ, ஜூலை 27

கனடா நாட்டின் அமைச்சரவை அந்தஸ் துள்ள அமைச்சராக ஹரி ஆனந்தசங்கரி நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை தமிழர் ஒருவர் கனடாவின் அமைச்சரவையில் இடம்பிடிப்பது இதுவே முதல் தடவையாகும்.

கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ நேற்றைய தினம் தனது அமைச்சரவையை மாற்றியமைத் தார். இதன்போது, 11

# சர்வகட்சி மாநாடு தோல்வி!

## கூறுகின்றார் சுமந்திரன் எம்.பி.

கொழும்பு, ஜூலை 27

ஜனாதிபதியுடனான சர்வகட்சி மாநாடு குறித்து சந்தேகத்துடனேயே வந்தோம், அதேபோன்று நிரூபிக்கப்பட்டு விட்டது என்று பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந் திரன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையா டல் முற்றிலும் அதிருப்தி யாகவே அமைந்தது என்றும் அவர் குறிப்பிட் டார்.

ஜனாதிபதி செயலகத் தில் நேற்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட் டத்தின் பின்னர் செய்தி யாளர்கள் மத்தியில் உரை யாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி எங்களை



இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யச் சொல்கிறார். 11

# தமிழ்க் கட்சி எம். பிக்களுடன் மட்டும் 13 குறித்து பேசுவது போதுமானதல்ல!

## சர்வகட்சி மாநாட்டில் உறுதிபட கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 27

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் தமிழ்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் மாத்திரம் கலந்துரை யாடுவது போதுமானதல்ல எனவும் அது முழுநாட்டிலும் தாக்கம் செலுத்தும் விடயம் என்பதால் அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும் ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க தெரிவித்தார். 11



### வலந்தலையில் நேற்று கறுப்பு ஜூலை நினைவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக் கோட்டை தொகுதி காரைநகர் மூலக் கிளை யினரின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினை வேந்தல் நேற்று மாலை வலந்தலை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் காரைநகர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கணேசபிள்ளை பாலச்சந்திரன் தலைமை யில் இடம்பெற்றது.

இதன்பொழுது 1983 ஆம் ஆண்டு ஜூலையில் உயிரிழந்த உறவுகளை நினைவு கூர்ந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவண பவன் பொதுச்சுடரேற் றினார்.

தொடர்ந்து நினைவேந்தலில் கலந்து 11

# இலவச சுகாதாரத்தை சீர்குலைப்பதற்கு சதி!

## தோற்கடிக்கவேண்டும் என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் இலவச சுகா தார துறையை சீர்குலைப் பதற்கான சதிகள் இடம் பெற்று வருகின்றன. அவற்றை முறியடிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளது - என்று சுகாதார அமைச்சர் 11

# தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிரான மனுக்களை நிராகரிக்குக

கொழும்பு, ஜூலை 27

உள்ளூராட்சி தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டுள்ள மனுக்களை நிராகரிக்குமாறு சட்டமா அதிபர், உயர் நீதிமன்றத் திடம் நேற்று கோரிக்கை விடுத்தார்.

கடந்த மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன் றத் தேர்தல் நடத்தப்படா மையால், அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள் ளன என்று கூறி 11

# ஜப்பான் வெளியுறவு அமைச்சர் நாளை இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, ஜூலை 27

ஜப்பானிய வெளிவிவ கார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா உத்தியோ கபூர்வ பயணமாக நாளை இலங்கை வரவுள்ளார்.

இரண்டு நாள் உத்தி யோகபூர்வ விஜயமாக வரும் அவர் வெளிவி வகார அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோ கபூர்வ கலந்துரையாட ல்களை மேற்கொள்வ துடன், ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க 11

# ஆசியாவின் மிகவும் பலவீனமான நாணயமாக மாறுகிறது ரூபாய்!

நியூயோர்க், ஜூலை 27

ஆசியாவின் மிகவும் பலவீனமான நாணயமாக ரூபாய் இந்த மாதம் மாறி யுள்ளதாக அமெரிக்கா வில் இருந்து வெளிவரும் புளூம்பெர்க் இணையத்த ளம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் முதல் அரையாண்டில் ஆசியா வில் செயல்படும் நாணய மாக ரூபாய் இருந்ததாக தெரிவித்துள்ள அந்த இணையத்தளம் இந்த வருட இறுதிக்குள் ஒரு டொலர் ரூபாயாக 355 ஆக இருக்கும் என்றும் 11

# கூட்டமைப்பினர் தமிழரின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர்

## சொல்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஜூலை 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அல்லர் என சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் எம்.பிக்களுக்கும், முன்னாள் ஜனாதிபதி 11

# நாட்டை பிளவுபடுத்த முற்பட்டால் அதிகார பகிர்வுக்கு ஆதரவில்லை

## சாகர காரியவசம் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 27

நாட்டை பிளவுபடுத் தும் எத்தகைய அதிகாரப் பகிர்வுக்கும் ஆதரவளிக்க மாட்டோம் என பொது ஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தலை மையில் நேற்று மாலை சர்வகட்சி மாநாடு 11

## இப்படியும் நடக்கிறது

சிங்கள தேசியக் கட்சி ஒன்றின் மூலம் அரசியலுக்கு வந்த இராசமாணிக்கம் சாணக்கிய பின்னர் தமிழரசுக் கட்சியில் ஐக்கியமாகி எம். பி. ஆன பின்னர், ஒரு தொலைக் காட்சிப் பேட்டி யில் சொன்னார்:

'தந்தை செல்வாவும் தேசியக் கட்சி ஒன்றில் அரசியலை தொடங்கி பின்னர் தமிழரசுக் கட்சியை தொடங்கியவர்தானே' என்று.

அதாவது மகிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து அரசியலுக்கு வந்தது பற்றி கேட்கப்பட்ட கேள்விக்கே சாணக்கிய இவ்வாறு பதிலளித்திருந்தார்.

அவருக்குப் போட்டியாக மட்டக்களப்பில் அரசியல் செய்பவர் ரெலோவின் பொதுச் செயலாளரும் தற்போதய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தேசிய அமைப்பாளருமான ஜனா என்று அறியப்பட்ட கோவிந்தம் கருணாகரம்.

ஒன்றுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக கடந்த தேர்தலில் போட்டியிட்டு மட்டக்களப்பில் வெற்றிபெற்ற இருவரும் அவர்கள்தான். இப்போது இருவரும் தமிழ்த் தேசிய அரசியலில் எதிர் எதிர் அணியில் இருக்கின்றார்கள்.

அதனால்தானோ என்னவோ சாணக்கியவைப்போலவே தானும் அவ்வப்போது பேசவேண்டும் என்று ஜனா நினைக்கிறாரோ தெரியவில்லை.

'முதல் அரசியல் படுகொலை அல்பிரட் துரையப்பா. அவரை சுட்டுக் கொன்றது பிரபாகரன். அதனைத் தூண்டியவர் அமிர்தலிங்கம். யாழ்ப்பாணத்தில் மேடையில் ஒருமுறை அமிர்தலிங்கம் சொன்னார், 'துரையப்பாவுக்கு இயற்கை மரணம் நிகழாது', என்றார்.

அதைத் தொடர்ந்தே அல்பிரட் துரையப்பா கொல்லப் பட்டார். அல்பிரட் துரையப்பா முதலாவது அரசியல் படுகொலை. பிரபாகரன் கடைசி அரசி யல் படுகொலை என்பது துரதிர்ஷ்டமானது.'

களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே ஜனா என்ற கருணாகரம் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இன்று துரையப்பா படுகொலை செய்யப்பட்ட நாள். ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தி ஐந்தாம் ஆண்டு ஜூலை இருபத்தி ஏழாம் திகதி துரையப்பா படுகொலை செய்யப்பட்டார். அவரின் நினைவாகத்தான் ஜனா இந்த விடயத்தை நினைவு கூர்ந்தாரோ தெரியவில்லை.

ஆனால், அவர் தெரிவித்திருக்கும் கருத்தை எங்கிருந்து பெற்றார் என்பதுதான் தெரியவில்லை. துரையப்பா சுட்டுக் கொலப்பட்டபோது ஜனா பதின்ம வயதினர். அமிர்தலிங்கத்தின் பேச்சுகளையெல்லாம் கேட்டிருப்பாரா என்பது தெரியவில்லை.

ஆனால், துரையப்பா படுகொலை செய்யப்பட்ட பின்னர், அந்தப் படுகொலை பற்றி அமிர்தலிங்கத்திடம் ஊடகங்கள் கருத்துக் கேட்டபோதே, அமிர்தலிங்கம் 'துரோகிகளுக்கு இயற்கை மரணம் வராதுதானே' என்று பதிலளித்தார். அதற்காக இளைஞர்களை உணர்ச்சிவசப்படுத்தி - ஆயுதங்களைத் தூக்க வைத்ததில் அமிர்தலிங்கம் போன்றவர்களின் பங்கு குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.


அதற்காக அமிர்தலிங்கம் இவ்வாறு சொன்னதால்தான் பிரபாகரன் சுட்டுக்கொன்றார் என்பது வரலாறுகளை தவறாக பதியவைத்துவிடும்.

ஏற்கனவே, யாழ். பொது நூலகம் எப்போது எரியூட்டப்பட்டது என்பதிலேயே சிலர் விதண்டாவாதம் செய்துகொண்டிருக் கின்றனர்.

தமிழ் மக்களின் அரசியல் போராட்ட வரலாற்றில் யாழ். நூலக எரிப்பு என்பது எத்தனை முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று அது எரியூட்டப்பட்டது எப்போது என்பதிலேயே வரலாற்றை திருப்பிப் போட்டு வருகின்ற அவல நிலையில் வரலாறுகள் பற்றி பேசுகின்றபோது அதுவும் மக்கள் பிரதிநிதிகள் பேசுகின்றபோது அது தவறான பதிவுகளை ஏற்படுத்திவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**- ஊர்க்குருவி.**

# ஆஸி. தமிழ் பெண் சட்டத்தரணி சங்கரி இலக்கியத்துக்கான விருது வென்றார்!




சிட்னி, ஜூலை 27

அவுஸ்திரேலிய தமிழ் சட்டத்தரணியான சங்கரி சந்திரன் தனது 'சாய் ரைம் அட் சினமன் கார்டன்ஸ்' ('Chai Time at Cinnamon Gardens'.) நாவலுக்காக 60 ஆயிரம் டொலர் மதிப்புள்ள மைல்ஸ் பிராங்க்ளின் இலக்கிய விருதை வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் சிட்னியில் உள்ள தி ஓவோலோ விருந்தகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இந்த விருது அறிவிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய எழுத்தாளர்களிடையே அங்கீகாரம் பெறுவது அசாதாரணமானது. இந்தநிலையில் 'மைல்ஸ் ஃபிராங்க்ளின் இலக்கிய விருதை வென்றது மிகவும் பெருமையாக இருக்கிறது. எனவே, இன்னும் தாம் இன்பஅதிர்ச்சியில் இருப்பதாக தமிழ் சட்டத்தரணி சங்கரி சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டுப் போரிலிருந்து தப்பிப்பதற்காக எண்பதுகளில் நாட்டை விட்டு வெளியேறிய இலங்கையைச் சேர்ந்த ஒருவரால் நடத்தப்படும் முதியோர் பராமரிப்பு நிலையத்தில் வசிப்பவர்களின் வாழ்க்கையை இந்த நாவல் எடுத்துக் காட்டுகிறது. அத்துடன், இது போர், இனப்படுகொலை, இனவெறி, குடும்பம், காதல் மற்றும் நட்பு போன்ற விடயங்களை இந்த நாவல் பேசியுள்ளது.

நிகழ்வின்போது சங்கரி சந்திரனின் நாவலைப் பாராட்டிய நடுவர்கள், இந்த நாவல் சர்ச்சைக்குரிய வரலாற்றுக் கூற்றுகளை கவனமாகப் பின்பற்றுகிறது. மறக்கப்பட்ட பயங்கரங்கள் மீண்டும் மீண்டும் நிகழும் கொடூரங்கள் என்பதை நினைவூட்டுகிறது என்று தெரிவித்துள்ளனர்.

சங்கரி சந்திரனின் பெற்றோர், இருவரும் மருத்துவர்களாக பணிபுரிந்தனர். நாடு உள்நாட்டுப் போரின் விளிம்பில் இருந்தமையால் இலங்கையை விட்டு வெளியேறினர். இந்தநிலையில் இங்கிலாந்துக்கு சென்று பின்னர் அவுஸ்திரேலியாவில் குடியேறினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடமராட்சி காணி சுவீகரிப்பு மூன்றாவது நாளாகவும் தடுப்பு



வடமராட்சி கிழக்கு, ஜூலை 27

வடமராட்சி கிழக்கில் முன்னெடுக்கப்படவிருந்த காணி சுவீகரிப்பு நடவடிக்கை மூன்றாவது நாளாக நேற்றும் தடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு - உடுத்துறை 10 ஆம் வட்டாரத்தில் உள்ள தனியாருக்கு சொந்தமான காணியை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையே நேற்று முன்னெடுக்கப்படவிருந்தது.

குறித்த பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் காணியில் ஒன்றரை பரப்பு காணியில் கடற்படை முகாம் அமைக்கப் பட்டுள்ளது. கடற்படை முகாம் அமைந்திருக்கும் இந்தக் காணியை கடற் படையினருக்கு நிரந்தரமாக சுவீகரிப்பதற்கான அளவீட்டு பணிக்காக அரச நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் சென்றிருந்தனர். காணி உரிமையாளர், மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து எதிர்ப்பை வெளிப்படுத்தியதையடுத்து காணி அளவீட்டை அதிகாரிகள் தற்காலிகமாக இடைநிறுத்திச் சென்றுள்ளனர்.

இதன்போது, பிரதேச மக்களுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் உள்ளிட்ட பலரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்திருந்தனர். (ஐ)

## குடத்தனை அ. த. க. பாடசாலை நூற்றாண்டு விழா இன்று!

வடமராட்சி, ஜூலை 27

வடமராட்சி கிழக்கு யா/ குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழா இன்று வியாழக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ். ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எம். எஸ். சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே. கனகேஸ்வரன், வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன் குயின்ரன், வடமராட்சி கல்விப் பணிப்பாளர் கே. சத்தியபாலன், வடராட்சி கிழக்கு பிரதேச செயலர் கே. பிரபாகரமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஐ)

# சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் பணியிலிருந்து இராணுவம் விலகும்

கொழும்பு, ஜூலை 27

இராணுவம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வெரஹெர கிளையில் மேற்கொள்ளப்படும் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் 01 ஆம் திகதி முதல் திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்படும் என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அநுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

2021 ஜனவரி 01 ஆம் திகதி விசேட பாதுகாப்பு அமைப்பின் ஊடாக இலங்கை சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடும் செயல்பாடுகள் இலங்கை இராணுவம் வசமாகின.

பொதுச் சேவை ஊடாக மக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்குதல் என்ற கருத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு வழியாக, அச்சிடும் செயல்முறையை இலங்கை இராணுவத்துக்கு மாற்ற அமைச்சரவை 2020 ஜூலை 1 ஆம் திகதி தீர்மானித்தது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடும் திணைக்களம் பல வருடங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியது. இந்த ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படும்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகள் தற்போது துறையின் விவகாரங்களில் பயிற்சி பெற்று வருகின்றனர், மேலும் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.07.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆடி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கனடிய எதிர்ப்பின் பின்னணி

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சிங்கள தேசியவாதத்தின் புதிய காவலராக தன்னை காண்பித்துக் கொள்கின்றார். ஒவ்வோர் அரசாங்கங்களிலும் இவ்வாறானவர்கள் இருப்பதுண்டு. மகிந்த ராஜபக்ஷ காலத்தில் விமல் வீரவன்ஸ இந்தப் பணியை செய்துகொண்டிருந்தார். தற்போது சரத் வீரசேகர இனவாதப் பணிக்கு தலைமை தாங்கியிருக்கின்றார். கோட்டாபய ராஜபக்ஷவின் ‘வியத்மக’ உருவாக்கிய அரசியல்வாதிகளில் சரத் வீரசேகரவே முதன்மையானவர்.

தமிழ் மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டை அரசியல் மயப்படுத்தும் நோக்கிலேயே கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டு, சரத் வீரசேகரவை மாகாண சபைகள் விவகாரங்களுக்கான அமைச்சராக்கினார். 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கும் ஒருவரை மாகாண சபைகள் விவகாரத்துக்கு அமைச்சராக்குவது முட்டாள்தனமாக தெரிந்தாலும் கோட்டாபயவை பொறுத்தவரையில் இவ்வாறான செயல்பாடுகளை தனது புத்திசாலித்தனமாகவே கருதிக்கொண்டார்.

இதேபோன்றுதான், 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்க்கும் ஒருவரை கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநராக நியமித்தார். ஆனால், கோட்டாபய தன்னை புத்திசாலியாக எண்ணிக்கொண்டு முன்னெடுத்த அனைத்து விடயங்களுமே இறுதியில் அவருக்கு எதிராகவே திரும்பின. வியத்மகவும் இறுதியில் காணாமல் போனது.

ஆனால், அதன் எச்சமான சரத் வீரசேகர போன்றவர்கள் இனவாத பணிக்கு தலைமை தாங்கி வருகின்றனர். இதுவரையில், தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துகளை வெளிப்படுத்திய சரத் வீரசேகர தற்போது கனடாவின் தூதுவரை வெளியேற்ற வேண்டுமென்று கூக்குரலிட்டு வருகின்றார். கனடிய தூதுவர் அண்மையில், கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து ருவிற்றரில் பதிவிட்டிருந்தார். இதனைத் தொடர்ந்தே சரத் வீரசேகர அதனை ஓர் இனவாத பிரசாரமாக முன்னெடுத்து வருகின்றார்.

கனடா, இலங்கையின் மனித உரிமைகள் விடயத்தில் தொடர்ந்தும் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது. கனடிய பிரதமர் ரூடோ 83 கறுப்பு ஜூலை படுகொலைகளை நினைவு கூர்ந்திருந்தார். பெருமளவான ஈழத் தமிழ் மக்கள் கனடாவில் வாழ்ந்து வருகின்றனர். கனடிய அரசியலிலும் தமிழ் மக்கள் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். இந்த நிலையில், தமிழ் மக்கள் தொடர்பில் பேசுவது கனடாவை பொறுத்தவரையில் ஓர் உள்விவகாரமாகவும் மாறிவிட்டது.

அண்மையில், ஒரே நேரத்தில் மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரை தடை செய்யும் தீர்மானத்தை அறிவித்திருந்தது. இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளை ஒரே நேரத்தில் கறுப்பு பட்டியலிட்ட சம்பவமானது. மிகவும் அரிதான ஒன்றாகும். கனடாவின் இவ்வாறான அணுகுமுறைகளால் சரத் வீரசேகர போன்றவர்கள் அதிருப்தியுற்றிருந்தனர். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் கனடிய தூதுவரை வெளியேற்றுமாறு குரலெழுப்பி வருகின்றார்.

கனடிய தூதுவரின் பதிவில் என்ன தவறு உண்டு? ஒரு தவறும் இல்லை. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதியொன்றின் மீது கரிசனையை காண்பிப்பது, அடிப்படையில் மனித உரிமை சார்ந்த ஒரு விடயமாகும். அது கனடிய வெளிவிவகார கொள்கைக்கு உட்பட்டது. உண்மையில் ஒரு நாட்டில் வாழும் சக மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் சிந்திக்க வேண்டிய பொறுப்பும் அதனை நிவர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடும் இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. அதனை இன்றுவரையில் செய்வதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. தொடர்ந்தும் இனவாதத்தில் குளிர்காயும் அரசியலையே செய்ய முற்படுகின்றனர்.

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் நாளைய போராட்டத்துக்கு வலுச் சேருங்கள்!

## ரவிகரன் கோரிக்கை



முல்லைத்தீவு, ஜூலை 27

நாளை வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறவுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுக்கும் போராட்டத்தில் அனைத்து தமிழ் உறவுகளும் திரண்டு பங்கேற்குமாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான துரைராசா ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட தங்களுடைய உறவுகளை தங்களிடமே தந்துதவுங்கள் என்ற கோரிக்கையோடு 2,500 நாட்களுக்கு மேலாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராடி வருகிறார்கள்.

தங்களுடைய உறவுகள்தான் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் வெளிப்படுகின்றார்களோ என்ற ஐயப்பாட்டுடன் இருக்கும் தமிழர் தாயகத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஒன்றுகூடி கலந்தாலோசித்து நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூட வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டி, இலங்கை அரசாங்கத்தைப் பொறுப்புக் கூற வைக்க வேண்டி நடைபெறவுள்ள உறவுகளின் போராட்டத்தில் அனைத்து தமிழ்மக்களும் ஒன்று திரண்டு பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார். (ஐ)

# மதுபானசாலை திறப்பதற்கு முழங்காவிலில் மக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஜூலை 27

முழங்காவிலில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிளிநொச்சி - பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முழங்காவிலில் பாடசாலை ஆசிரியர் விடுதி, விளையாட்டு மைதானம், ஆலயம் ஆகியவற்றின் மையப் பகுதியில் மதுபானசாலை திறக்க முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து கிராம மக்கள் இணைந்து பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து பொலிஸாரால் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின்படி கிளிநொச்சி நீதிமன்றம் விதித்த தடைக்கு எதிராக, மதுபான நிலையத்தை அமைக்கவுள்ள உரிமையாளர் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மூலம் குறித்த தடை உத்தரவு நீக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அந்தப் பிரதேச மக்கள் நேற்று புதன்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் ஏ-32 மன்னார் பூநகரி வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த முழங்காவில் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டவிரோத மின்சார வேலிகளால் 7 மாதங்களில் 36 யானைகள் பலி!

கொழும்பு, ஜூலை 27


கடந்த 7 மாதங்களில் சட்டவிரோத மின் வேலிகளால் 36 யானைகள் பலியாகின என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விவசாய நிலங்களையும் மனித உயிர்களையும் காக்க வனவிலங்கு திணைக்களமும் மின்சார வேலிகளை உருவாக்கினாலும் அது சரியான தொழில்நுட்ப முறைப்படியே மேற்கொள்ளப்படுகிறது.

ஆனால், அறிவியல்பூர்வமற்ற முறையில் போடப்பட்டுள்ள அங்கீகாரமற்ற மின் வேலிகளே யானைகளின் உயிரிழப்புகளுக்குக் காரணம்.

வனவிலங்கு திணைக்களம் சட்டவிரோதமாக மின் வேலிகளை இடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துகிறது. எனினும், சட்டவிரோதமாக மின் வேலிகள் தொடர்ந்தும் அமைக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூலை - 27 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆடி 11**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 1.30 - 03.00**
**திதி : தசமி**




**மேடம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர்செய்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.

**இடபம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு வரும்.

**மிதுனம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். வெளியூரிலிருந்து செய்தி வரும். தாயாருக்கு கை, கால் வலி வந்து போகும்.

**சிம்மம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆடை ஆபரணம் சேரும்.

**துலாம்**
குடும் பத்தாரை குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் வேறுவிதமாகப் புரிந்து கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் வேண்டாம்.

**விருட்சிகம்**
ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பமடைவீர்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். வியாபாரத்தில் கணிசமாக லாபம் உயரும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நம்பிக்கைக்குரிய வரை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

**மகரம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள்.

**கும்பம்**
கடந்த 2 நாட்களாக குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். உறவினர்கள் மதிப்பார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துப் போவது நல்லது வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். நாவடக்கம் தேவை.

# இலங்கை கடற்படையால் மீனவர் கைது கண்டித்து இராமநாதபுரத்தில் மாநாடு!

## முதல்வர் ஸ்டாலின் பங்கேற்பார்

கொழும்பு, ஜூலை 27

இலங்கை கடற்படையால் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதையும் தாக்கப்படுவதையும் கண்டித்து இராமநாதபுரத்தில் ஓகஸ்ட் 18ஆம் திகதி நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கலந்து கொள்ளவுள்ளார்.

இது தொடர்பாக மீன்வளம் - மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

“தமிழ்நாட்டைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியைச் சேர்ந்த 9 மீனவர்கள் நெடுந்தீவு பகுதியில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைதுசெய்யப்படுவதும் - தாக்கப்படுவதும் - அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கும் தொடர்ந்து கடிதம் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வருகிறார். இருந்த போதிலும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், மீனவர்களின் வாழ்வாதார பிரச்னைகள் தொடர்பாக தமிழ்நாட்டின் அனைத்து மீனவர் சங்கங்கள் ஒன்றிணைந்து, தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவது - தாக்கப்படுவது - அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவது போன்ற நடவடிக்கைகளை கண்டித்தும் அதனை தடுத்திட கோரியும் மேலும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும் இராமநாதபுரத்தில் ஓகஸ்ட் 18ஆம் திகதி மாநில மாநாடு நடத்தவுள்ளது.

இந்த மாநில மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் கலந்து கொள்ள வேண்டும் என்று மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்திருந்தனர். மீனவர்கள் சங்கங்களின் அழைப்பை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் ஓகஸ்ட் 18-ஆம் திகதி இராமநாதபுரத்தில் நடைபெறவுள்ள மீனவர் சங்கங்களின் மாநில மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்துள்ளார் - என்றுள்ளது.

(ஐ)

# குடிக்க வைத்த கருணாநிதியின் பெயரை மது கடைக்கு வையுங்கள்

## நாம் தமிழர் சீமான்



மதுரை, ஜூலை 27

“குடிக்க வைத்தது கருணாநிதி. அவர் பெயரை மதுக் கடைகளுக்கு வையுங்கள்”, என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களை சந்தித்த அவர், “நீங்கள் (மக்கள்) முதல்வரை தெரிவு செய்யவில்லை. போஸ்ட் மாஸ்ரரை செய்துள்ளீர்கள். எல்லாவற்றுக்கும் கருணாநிதி பெயரை வைக்கிறீர்கள். நூலகத்துக்கு கருணாநிதி பெயர். ஏன் நூலகத்துக்கு கருணாநிதி பெயர் வைக்க வேண்டும்?. அவருக்கு முன்னர் யாருமே படிக்கவில்லையா? வள்ளுவன், கந்தன் பெயரை வைத்தால் ஆகாது.

250 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் நூலகத்துக்கு கருணாநிதி பெயர். அவர் என்ன படித்து விட்டார் அல்லது எழுதிவிட்டார். நியாயமா அவர் பெயரை வைப்பதற்கு ஒரே ஓர் இடத்துக்கு மட்டும் தான் தகுதி இருக்கு. அது மதுபான கடை. படிக்க வைத்தவர் காமராஜர். அவர் பெயரில்கூட நூலகம் இல்லை. குடிக்க வைத்தவர் கருணாநிதி. அவர் பெயரை மதுக் கடைக்கு வையுங்கள். கோடநாடு வழக்கு குறித்து அண்ணாமலை ஏன் பேச மறுக்கிறார்?. அதிமுகவுடன் கூட் டணி வைத்ததால் அவர்களை காப்பாற்ற வேண்டிய அவசியம் அண்ணாமலைக்கு உள்ளது. தமிழகத்தில் உள்ள மொத்த ரௌடிகளும், ஊழல்வாதிகளும் பா. ஜ. கவில்தான் இருக் கின்றனர்.

அ. தி. மு. கவில் இருப்பவர்கள் புனிதமானவர்கள் என்பதை காட்ட தி. மு. க. ஊழல் பட்டியலை வெளியிடுகிறாரா?. பிரதமராக மோடியை மீண்டும் தேர்ந்தெடுத்தால் அனைவரும் சந்திர மண்டலத்தில்தான் குடியேற வேண்டும். இந்தியாவில் யாரும் வாழ முடியாது - என்றார்.

(ஐ)

# ஆட்களை திரட்டும் பணியில் ஓ. பி. எஸ்., இ. பி. எஸ். தீவிரம்!

சென்னை, ஜூலை 27

அ. தி. மு. க., மாநாட்டுக்கு மக்களை திரட்டுவதில் பழனிசாமியும், ஆர்ப்பாட்டத்துக்கு ஆட்களை திரட்டுவதில், பன்னீர்செல்வமும் மும்முரமாக உள்ளனர்.

அ. தி. மு. கவில் இருந்து பன்னீர்செல்வம் நீக்கப்பட்டதால் தென் மாவட்டத்தில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை காட்டுவதற்காக, மதுரையில் அடுத்த மாதம் 20இல் மாநாடு நடத்த, பழனிசாமி முடிவு செய்துள்ளார்.

இந்த மாநாட்டு பணிகளை ஒருங்கிணைக்க, முன்னாள் அமைச்சர்கள் தலைமையில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆட்களை திரட்டவும் தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.



மக்களவை தேர்தல் நடக்கவுள்ள நிலையில், ஒட்டுமொத்த கட்சியும் தன்னிடம் இருப்பதை காட்டவும், தி. மு. க. அரசுக்கு எதிராக மக்களை திரட்டவும் இந்த மாநாட்டை பயன்படுத்த பழனிசாமி முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதேநேரத்தில், கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பன்னீர்செல்வம், தன் ஆதரவாளர்களுடன் இணைந்து, பழனிசாமிக்கு எதிராக நடவடிக்கைகளை தொடங்கியுள்ளார்.

கோட நாடு கொள்ளை - கொலை வழக்குக்கு நீதி கோரி வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி பன்னீர்செல்வம் தலைமையில் மாவட்டம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அ.ம.மு.க.,வும் பங்கேற்கும் என்று தினகரன் அறிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆட்களை திரட்டி தனது பலத்தை நிலைநாட்ட பன்னீர்செல்வம் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

(ஐ)





# கிளிநொச்சி சித்த மருந்தகத்தில் குரங்குகள் தொல்லையால் அவதி

## மருத்துவ சேவையை முன்னெடுப்பதில் சிக்கல்

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி சித்த மத்திய மருந்தகத்தில் குரங்குகள் தொல்லை காரணமாக மருத்துவ சேவையை முன்னெடுப்பதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பகல் மற்றும் இரவு வேளைகளில் குரங்குகள் மருந்தகத்திற்குள் நுழைந்து மருதகத்தை சேதப்படுத்துவதால் பல மருந்துகள் பயன்படுத்த முடியாத நிலையில் வைத்தியசாலையில் காணப்படுவதாகவும் இதனால் மருத்துவ தேவைக்காக செல்பவர்களுக்கு உரிய மருந்துகள் அங்கு கிடைப்பதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மருந்தக நிர்வாகத்தினர் வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் மற்றும் குரங்கு தொல்லை தொடர்பிலும் வடமாகாண ஆளுநர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியுள்ளதாக தமக்கு தெரிவித்துள்ள போதும் இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

எனவே வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு பி.எஸ் .எம்.சாள்ஸுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மருந்தகத்திற்கு நிரந்தர கட்டடம் இல்லாத நிலையில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் நிலையத்தின் கட்டடத்திலே தற்காலிகமாக குறித்த மருந்தகம் இயங்கி வருகின்றது.

எனினும் குறித்த கட்டடத்தின் அபிவிருத்திப் பணிகள் முழுமையாக நிறைவடையாத நிலையில் நிலையத்தின் கூரைத்தகடுகள் குரங்குகளால் சேதமாக்கப்பட்ட நிலையில் தற்போது கழன்று விழும் நிலையில் காணப்படுவதால் அங்கு பணியாற்றுபவர்கள் மற்றும் வைத்திய சேவையினை பெறசெல்பவர்கள் உயிர் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது எனவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை, தற்பொழுது மருந்தகத்திற்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்வதனால் வைத்தியசாலைக்கு வழங்கும் மருந்துகளின் அளவுகளினை உடனடியாக அதிகரிக்கவேண்டும் என்பதுடன் குறித்த சித்த மருத்துவ நிலையத்தின் அடிப்படையான திருத்த வேலைகளை உடனடியாக மேற்கொண்டு மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்திற்கான சிறந்த மருத்துவ சேவையினை வழங்கும் நிலையமாக குறித்த மருந்தகத்தை மாற்றி அமைத்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# சமிக்ஞையை மீறுவதாலேயே உயிரிழப்புகள் அதிகரிப்பு!

## கிளிநொச்சி ரயில் நிலைய அதிபர்

கிளிநொச்சி, ஜூலை 27

ரயில் சமிக்ஞையை மீறிச் செல்வதாலேயே அதிகளவு விபத்துகளும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன என்று கிளிநொச்சி ரயில் நிலைய அதிபர் பு. பரமசிகாமணி தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“5 மாதங்களின் பின்னர் மீண்டும் ரயில் சேவை வடக்கில் வழமைபோல் ஆரம்பித்துள்ளது. ரயில் கடவையில் ரயில் வருவதற்கான சமிக்ஞை காட்டப்பட்ட நிலையிலும், மக்கள் அதனைப் பொருட்படுத்தாது மீறிச் செல்கின்றனர். இதன் காரணமாக பல உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். வீதி சமிக்ஞைகளை மதித்து, ரயில் செல்லும்வரை சில நிமிடங்கள் தாமதித்து செல்வதன் மூலம் உயிர்ச்சேதம், பொருள்சேதம் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளமுடியும்.”- என்றார். (ஐ)

# உள்ளூராட்சி நிறுவனங்களில் 12,000 பணியாளர் வெற்றிடம்!

கொழும்பு, ஜூலை 27



உள்ளூராட்சி நிறுவனங்களில் சுமார் 12,000 பணியாளர் வெற்றிடங்கள் காணப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அந்த நிறுவனங்களில் 10,000 பேர் பணிபுரிவதாகவும் அவர் கூறினார்.

தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் உள்ள10ராட்சி நிறுவனங்களில் பணியாற்றுபவர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கான நவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த தரப்பினரை நிரந்தர சேவைக்கு உள்வாங்குவதற்காக அவர்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-கே)

# தொழில் அமைச்சின் செயலருக்கு பிடியாணை

கொழும்பு, ஜூலை 27

ஹொரணை பிரதேசத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலையில், ஐவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், பொய்யான சாட்சியத்தை வழங்குமாறு பொறியிலாளருக்கு அழுத்த கொடுத்த குற்றச்சாட்டில், தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ.விமலவீரவை உடனடியாக கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு, ஹொரணை நீதவான் நீதிமன்ற நீதவான் சந்தன கலன்சூரிய பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு முன்பு, ஹொரணை பிரதேசத்திலுள்ள இறப்பர் தொழிற்சாலையின் இரசாயன திரவியங்களை அகற்றும் தொட்டிக்குள் விழுந்து ஐவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் ஹொரணை நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வழக்கில், களுத்துறை மாவட்ட முன்னாள் தொழிற்சாலை பரிசோதகர் பொறியியலாளர் ஒருவரை பொய்யான சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறு அழுத்தம் கொடுத்ததாக முன்னாள் தொழில் ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஏ. விமலவீர மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பிடியாணையை ஏழு நாட்களுக்குள் பொலிஸ் மா அதிபர் நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதவான் உத்தரவுப் பிறப்பித்துள்ளார்.

இறப்பர் தொழிற்சாலையில் பணியாளர்கள் இருவர் உள்ளடங்கலாக ஐவர் இரசாயன தொட்டிக்குள் விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்துக்கு எதிராக குறித்த தொழிற்சாலையில் கடமையில் இருந்த முகாமைத்துவ பணிப்பாளர் உள்ளடங்கலான அதிகாரிகளுக்கு எதிராக தொழில் திணைக்களம் ஹொரண நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்க்கட்சி தலைவர் சஜித்துடன் வெளிநாட்டுத் தூதுவர்கள் பேச்சு!

கொழும்பு, ஜூலை 27

12 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் உள்ளிட்ட குழுவினருடன் விசேட கலந்துரையாடல் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கொழும்பில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

இதன்போது பல்வேறு விசேட விடயங்கள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டதுடன் இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துதல், அரசமைப்பைப் பாதுகாத்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துதல் போன்ற விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

அரசின் ஜனநாயகத்தின் அப்பட்டமான மீறல் போலவே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் அரசின் திறமையின்மை, ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை முறையாக செயல்படுத்தாதது மற்றும் சட்டத்துறையில் எழுந்துள்ள பல பிரச்னைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

அமெரிக்க தூதுவர், நெதர்லாந்து தூதுவர், இந்தியத் தூதுவர், நியூசிலாந்து தூதுவர், அவுஸ்திரேலியாத் தூதுவர், பிரான்ஸ் தூதுவர், கனேடிய தூதுவர், ஐக்கிய இராச்சியத்தின் பதில் பிரதி தூதுவர், ரோமானியத் தூதுவர், ஜப்பானிய பிரதித் தூதுக்குழுவின் பிரதானி, இத்தாலிய பிரதி தூதுக்குழுவின் பிரதானி, ஐரோப்பிய ஒன்றிய அரசியல் விவகாரப் பிரிவின் உறுப்பினர் ஆகியோர் இதில் பங்கேற்றிருந்தனர்.



எதிர்க்கட்சியைப பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தூதுவர்கள் முன்னிலையில் உரையாற்றியதுடன் நாடு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் விளக்கமளித்தார்.

வேண்டுமென்றே தேர்தலை ஒத்திவைப்பதன் மூலம் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய அச்சுறுத்தல் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பாக தூதுவர்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

மக்களின் பிரச்னைகளில் அக்கறையின்மையால் அஸ்வெசும போன்ற வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்துள்ளன என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் சுகாதாரத்துறை எவ்வாறு சீர்குலைந்துள்ளது மற்றும் தரமற்ற மருந்துகளால் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறித்தும் நினைவு கூர்ந்தார். (அ)

# லயன் குடியிருப்பில் தீ; 10 வீடுகள் கடும் சேதம்

கொழும்பு, ஜூலை 27

நுவரெலியா, லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ரஹனவத்த பிரதேசத்தில், நேற்று முன்தினம் இரவு லயன் குடியிருப்பொன்று தீக்கிரையாகியுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தீ விபத்துச் சம்பவத்தில் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தில் உயிராபத்துக்கள் பதிவாகவில்லை என்றும் ஆனால் பொதுமக்களின் சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (அ-கே)

# அரச சொத்துகளை விற்பனை செய்து நாட்டை ஏமாற்றுகின்றார் ஜனாதிபதி!

## குற்றம்சாட்டுகின்றார் அநுரகுமார

**கொழும்பு, ஜூலை 27**

**அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி ஒளிந்து கொண்டிருக்கிறார் என்று ஜே.வி.பியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

பெல்மடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற காலத்திலிருந்து, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் மக்கள் மத்தியில் பொதுக்கூட்டமொன்றைக்கூட நடத்தி நாம் காணவில்லை.

மக்கள் ஆணையால் ஆட்சிக்கு வராத அவர், அரசமைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒழிந்து கொண்டிருக்கிறார்.

இன்று வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருகிறது. ஆனால், ஜனாதிபதியோ நாட்டின் பொருளாதாரம் உயர்வடைவதாக குறிப்பிடுகிறார்.

மத்திய வங்கியின் அறிக்கையொன்று அண்மையில் வெளியானது. இதில், 68 வீதமான மக்கள் இரண்டு வேளை உணவினை மட்டுமே உற்கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு, கடனை திருப்பிச் செலுத்தியும் எரிபொருள், எரிவாயு இருந்ததாகக்



கூறப்பட்டது. ஆனால், இவ்வாண்டு 600 கோடி டொலர் கடனை திருப்பிச் செலுத்தப் போவதில்லை என்று கூறப்படுகிறது.

அரச சொத்துக்களை விற்பனை செய்து, அதன் ஊடாக கிடைக்கும் டொலரைக் காண்பித்து, இந்த நாடு முன்னேறி விட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்-என்றார். (அ)

# சிறிஜயவர்த்தனபுர பல்கலைக்கு புதிய துணைவேந்தர் நியமனம்

கொழும்பு, ஜூலை 27

சிறி ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் எம் மானேகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று வருட காலத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இந்த நியமனத்திற்கு முன்னர், பேராசிரியர் பத்மலால் எம் மானேகே பட்டதாரி கற்கைகள் பீடத்தின் பீடாதிபதியாக பணியாற்றினார். (அ)

# மெனிங் சந்தையில் 12 பேர் கைது!

கொழும்பு, ஜூலை 27

நீதிமன்ற உத்தரவை மீறி பேலியகொடை மெனிங் சந்தையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குழுவினரில் 12 பேர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவை மீறிய குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அதிகாரி கூறினார்.

மெனிங் சந்தையில் கடைகளை விநியோகிப்பதில் முறைகேடு நடந்ததாகக் கூறி சந்தையில் சிலர் சில நாட்களாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த நிலையில், போராட்டத்துக்கு எதிராக பொலிஸார் நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சவப்பெட்டியை வீதியில் வைத்து அ,புரத்தில் மக்கள் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 27

யானையிலிருந்து மக்களை பாதுகாக்குமாறு கோரி சவப்பெட்டியை வீதியில் வைத்துக் கொண்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அநுராதபுரம் மாவட்டம் ஹொரவப்பொத்தானை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நபடவெவ கிராமத்தில் காட்டு யானையின் தாக்குதலினால் கடந்த ஞாயிற்றுக் கிழமை பெண்ணொருவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் நேற்று முன்தினம் நல்லடக்கம் செய்யப்படுவதற்காகக் கொண்டு செல்லும் போது கிராம மக்கள் சவப்பெட்டியை வீதியில் வைத்துக் கொண்டு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களுக்கு யானையால் பாதுகாப்பு வழங்குமாறு கோரி கோஷங்களை எழுப்பி ஆர்ப்



பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யானையின் அட்டகாசம் தொடர்பில் பல தடவைகள் அரச அதிகாரிகளிடம் தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, யானைக்கு வழங்கப்படும் அந்தஸ்து கூட மக்களுக்கு வழங்கப்படுவதில்லை எனவும் யானை தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்தாரென பொலிஸாருக்கு தகவல் வழங்கியும் பொலிஸார் தாமதமாகவே சம்பவ இடத்திற்கு வருகை தந்ததாகவும் அக்கிராம மக்கள் தமது கவலையை வெளிப்படுத்தினர். (அ)

# ஆளுநரின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் வவுனியாவில் திறப்பு



வவுனியா, ஜூலை 27

வவுனியா நகரசபை நூலகக் கட்டடத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் மக்கள் ஒழுங்கமைப்பு தொடர்பாடல் அலுவலகம் நேற்று வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆளுநரை தொடர்பு கொள்வதற்கு நீண்ட தூரம் பயணித்து யாழ்ப்பாணம் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதால் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த அலுவலகம் அமைக்கப்பட்டது.

மேலும் வார நாட்களில் மக்கள் தமது முறைப்பாடுகளை அலுவலகத்தில் தெரிவிக்க முடியும். அத்துடன் மாதத்தில் இரு தடவைகள் ஆளுநர் இங்கு வருகை தந்து மக்களை சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிரஞ்சன், உள்ளூராட்சி அதிகாரிகள், ஆளுநர் அலுவலக அதிகாரிகள், நகரசபை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ஆயுத களஞ்சியம் முற்றுகை!

கொழும்பு, ஜூலை, 27

மாத்தறை திஹாகொட பண்டாரத்தவெல்ல பிரதேசத்தில் ஆயுதக் களஞ்சியமொன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டது.

மாத்தறை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் இந்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இடத்தில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரி-56 துப்பாக்கி, ஒரு மகசீன், 10 ரி-56 தோட்டாக்கள் கண்டெடுக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

மாத்தறை குற்றப்பிரிவு மற்றும் மாத்தறை பொலிஸார் இணைந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# 3 ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஜூலை 27

மூன்று ரயில் சேவைகள் நேற்று காலை இரத்து செய்யப்பட்டதாக ரயில் திணைக்களம் தெரிவித்தது.

ரயில் இயந்திர உதவி சாரதிகளுக்கு நிலவும் பற்றாக்குறையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று முன் தினம் மாலையும் நான்கு ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. (அ)

# பள்ளத்தில் பாய்ந்த அமைச்சரின் பஸ்!


கொழும்பு, ஜூலை 27

கொழும்பில் இருந்து ஹப்புத்தளை, பங்கெட்டிய பகுதிக்கு சென்றுகொண்டிருந்த சொகுசு பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி நேற்று அதிகாலை விபத்துக்குள்ளானது.

ஹப்புத்தளை - பதுளை வீதியில் ஹப்புத்தளை தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான சொகுசு பஸ் அமைச்சர் ஒருவருக்கு சொந்தமானது என தெரிவிக்கப்படுகிறது.

சாரதி தூங்கியதால் இந்த விபத்து நடந்துள்ளது. (அ)



# உயர்தரத்துக்கு ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 27

உயர்தரத்தின் சில பாடங்களுக்கான ஆசிரியர்களை இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்த கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, உயர்தரத்தின் கணிதம், விஞ்ஞானம், சர்வதேச மொழிகள், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்காக ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதன்படி மாகாண மட்டத்தில் 5450 பேர் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர் சேவை விதிமுறைகளுக்கு அமைவாக 35 வயதுக்கு குறைவான, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பட்டதாரிகள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த போட்டிப் பரீட்சைக்காக எதிர்வரும் சில வாரங்களில் விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன. (அ)

# இலங்கைக்கான பயண எச்சரிக்கையை மீண்டும் புதுப்பித்துள்ளது பிரித்தானியா

கொழும்பு, ஜூலை 27

**இலங்கைக்கு செல்லும் தமது பிரஜைகளுக்கான வெளிநாட்டு பயண ஆலோசனைகளை பிரித்தானியா புதுப்பித்துள்ளது.**

**இதன்படி பயணம் செய்வதற்கு முன், இலங்கையின் தற்போதைய நுழைவுக் கட்டுப்பாடுகள் மற்றும் நுழைவுத் தேவையுள்ள பகுதியைச் சரிபார்க்குமாறு பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தலில் கோரப்பட்டுள்ளது.**

பயணக் காப்பீட்டைப் பெறுவதும், அது போதுமான காப்பீட்டை வழங்குகிறதா என்பதைச் சரிபார்ப்பதும் முன்னெப்போதையும் விட முக்கியமானது.

இலங்கையின் பொருளாதார நிலை பலவீனமாகவே உள்ளது.

நிலைமைகள் மோசமடைந்தால், சில தயாரிப்புகள் உதாரணமாக மருந்துவம் மற்றும் உணவுப் பொருட்கள் குறைவாகக் கிடைக்கக்கூடும்.

மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் கிடைப்பது, போக்குவரத்து, வணிகம் மற்றும் வணிகச் சேவைகளைப் பாதிக்கலாம்.

சனநெரிசல் மிகுந்த இடங்களை தவிர்க்குமாறும், இந்த பயண ஆலோசனை மற்றும் உள்ளூர் ஊடகங்கள் மூலம் முன்னேற்றங்களை அவதானிக்க வேண்டும் எனவும் பிரித்தானிய அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டவர்கள் பார்வையிடும் இடங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் வெகுவாக கூடும் இடங்களில் கண்மூடித்தனமாக தாக்குதல்கள் நடத்தப்படலாம்.

நாடு முழுவதும் டெங்கு காய்ச்சல் பரவி வருகிறது.

இந்தநிலையில் உதவி தேவைப்படுமானால், நாட்டின் பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்துடன் தொடர்பில் இருக்குமாறும் பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கான தமது பயண ஆலோசனையில் தெரிவித்துள்ளது. (அ)

# கொழும்பு தேசிய வைத்தியசாலை செயற்பாடுகள் முடங்கும் அபாயம்!

## மின் கட்டண நிலுவை செலுத்தாமையால்

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் செயற்பாடுகள் முடங்கும் அபாயத்தை தவிர்க்கும் வகையில், நிலுவைத் தொகையை விரைவில் வழங்குமாறு இலங்கை மின்சார சபை, சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் ஸ்தாபன பிரிவு, ஏற்கனவே பல வைத்தியசாலைகளின் மின்சார பராமரிப்புப் பணிகளில் இருந்து விலகியுள்ளதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் சொய்சா மகளிர் வைத்தியசாலை, லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, தேசிய கண் வைத்தியசாலை, காசில் வீதி மகளிர் வைத்தியசாலை உள்ளிட்ட ஆறு வைத்தியசாலைகள் அதில் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, உரிய தொகையான 34 மில்லியன் ரூபா செலுத்தப்படும் வரை மூன்றாம் தரப்பு மின்சார விநியோகத்திற்கான கோரிக்கைகளை முன்வைக்க முடியாது என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் மின்சார சபை பராமரிப்புப் பிரிவானது, தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, தொடர்ந்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் என சுகாதார செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய நிதி நிலைமை சிக்கலாக மாறியுள்ளதால், தேசிய வைத்தியசாலையில் 121 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிலுவைத்தொகை செலுத்தப்படாமையால் எதிர்காலத்தில் சேவைகளில் இருந்து விலக நேரிடும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் மின்பிறப்பாக்கிகள் பராமரிக்கப்படாமல், அவை திடீரென பழுதடைந்தால், வைத்தியசாலை செயல்பாடுகள் முடங்குவதற்கு தாங்கள் பொறுப்பேற்க முடியாது என்றும், நிலுவைத் தொகையை விரைவில் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரச் செயலாளருக்கு மின்சார சபை அறிவித்துள்ளது. (அ)

# அரச நில அளவையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில்

கொழும்பு, ஜூலை 27

அரச நில அளவையாளர்கள் சங்கத்தினர் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

சுகயீன விடுமுறையை அறிவித்து, 4 கோரிக்கைகளின் அடிப்படையில் இந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் துமிந்த உந்துகொட தெரிவித்தார்.

தமது கடமைகள் தனியார் துறைக்கு ஒப்படைக்கப்படுவதாக குற்றஞ்சாட்டி சுகயீன விடுமுறை அறிக்கை மூலம் இந்த தொழிற்சங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# மரக்கறி விலை உச்சம்!

கொழும்பு ,ஜூலை 27

சந்தையில், கரட் மற்றும் போஞ்சி ஆகியவற்றின் விலை, தொடர்ந்தும் அதிகரித்த நிலையில் உள்ளதாக, பொருளாதார மத்திய நிலையங்களுக்குப் பொறுப்பானவர்கள் தெரிவிக்கின்றனர்.

பேலியகொடை மெனிங் சந்தையில் போஞ்சி கிலோ ஒன்றின் மொத்த விலை 300 முதல் 350 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் விற்பனையாகிய நிலையில், மீகொடை சந்தையில், 400 ரூபாவை விடவும் அதிகரித்த விலையில் விற்பனையாகியுள்ளது.

பேலியகொடை, தம்புள்ள, மீகொடை மற்றும் நுவரெலியா முதலான பொருளாதார மத்திய நிலையங்களில், கரட் கிலோ ஒன்றின் மொத்த விலை, 400 முதல் 470 ரூபா அளவில் பதிவாகியுள்ளது.

# சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவர் முல்லைத்தீவில் சிக்கினர்!

முல்லைத்தீவு, ஜூலை 27

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத காடழிப்பில் ஈடுபட்ட இருவர் நட்டாங்கண்டல் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், காடழிப்புக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

குற்றத்தடுப்பு பொலிஸார் மற்றும் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார், காடழிப்பில் ஈடுபட்ட இருவரை கைது செய்ததுடன் காடழிப்பிற்கு பயன்படுத்திய மரம் வெட்டும் இயந்திரங்களை பறிமுதல் செய்தனர்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 68 மற்றும் 38 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருவர் மீதும் அரச காணியை அத்துமீறி பிடித்தல் மற்றும், பெறுமதிமிக்க மரங்களை வெட்டுதல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். (அ)

# உலக உணவு விவசாய ஸ்தாபனத்தால் 8,300 மெற்றிக் தொன் யூரியா நன்கொடை

கொழும்பு, ஜூலை 27

8,300 மெற்றிக் தொன் யூரியா உரத்தை இலங்கைக்கு நன்கொடையாக வழங்க உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த யூரியா உரத்தொகையானது, பெரும்போகத்தில் ஒரு ஹெக்டேயருக்கும் குறைவாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் குருநாகல் மாவட்டத்திலும் உள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்திற்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி வழங்கவுள்ளது.

இதுவரை பல்வேறு சந்தர்ப்பங்களில் நாட்டின் விவசாயிகளுக்கு 15,000 மெற்றிக் தொன் வரையான யூரியா உரம், உலக உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சீனா செல்லும் இலங்கை கறுவா

கொழும்பு, ஜூலை 27

இலங்கையில் இருந்து சீனாவுக்கு கறுவாவை ஏற்றுமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாகக் கூறப்பட்டுள்ளது.



உலகம் முழுவதும் வாசனை திரவியங்களுக்கென பெயர் பெற்ற இலங்கையில் இருந்து கறுவா மெக்ஸிக்கோ மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும், பெரு போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

ஏற்றுமதிச் சந்தையில் கசியா கறுவா மற்றும் கறுவா என இரண்டு வகையான கறுவாப் பட்டை உள்ளது.

இவற்றில், கசியா கறுவாப் பட்டையின் தரம் உண்மையான கறுவாப்பட்டையின் தரத்தை விட குறைவாக இருப்பதால், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் உண்மையான கறுவாப்பட்டைக்கு இன்னும் அதிக கேள்வி உள்ளது.

இந்நிலையில் எதிர்காலத்தில் இலங்கையில் இருந்து சீனாவிற்கு கறுவாவை ஏற்றுமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது இடம்பெற்று வருவதாக ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.பி. பி.திஸ்னா தெரிவித்துள்ளார்.

கசியா கறுவாப்பட்டையை அதிகம் நுகரும் நாடுகளில், சீனா தற்போது முதலிடத்தில் உள்ளது. எனவே, சீனாவுக்கு கறுவாப்பட்டை ஏற்றுமதி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தால், அது நாட்டின் ஏற்றுமதித் துறையில் பாரிய வளர்ச்சியாக அமையும் என பணிப்பாளர் நாயகம் கூறினார். (அ)

# வவுனியா வர்த்தக சங்க கட்டடம் குறித்து அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குழப்பம்!

வவுனியா, ஜூலை 27

வவுனியா வர்த்தக சங்கத்திற்குரிய புதிய கட்டடம் எந்த வித அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டதாக தெரிவித்து வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் காரசாரமாக விவாதம் முன்வைக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா நகரின் அபிவிருத்தி தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது நகரில் ஏற்கனவே சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பாகவும், நகரில் உள்ள காணிகளை பாதுகாப்பது தொடர்பாகவும் எவ்வாறான நடவடிக்கையை எடுப்பது என்று அபிவிருத்திக் குழுத் தலைவரால் கோரப்பட்டதுடன், வவுனியா வர்த்தகர் சங்கத்தால் அமைக் கப்பட்ட புதிய கட்டடம் சட்டவிரோதமாக அமைக்கப் பட்டதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

குறித்த கட்டடம் அமைந்துள்ள காணி அரச காணியாக இருப்பதால் பிரதேச செயலாளர் ஏன் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என்று ஆளுநரால் கோரப்பட்டது.

இதற்கு பதில் அளித்த பிரதேச செயலாளர், இது தொடர்பாக நகர சபைக்கு கடிதம் அனுப்பியதாகவும், அவர்கள் அதற்கான நடவடிக்கையினை எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

எனினும், காணி பிரதேச செயலாளரின் கீழ் இருப்பதால் நீங்கள் கட்டடம் அமைக்க முன்னரே அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவேண்டும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மாவட்ட குழுக்கூட்டத்தில் காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

மேலும் இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்கள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணித்த ஆளுநர், ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டடங்களின் பெறுமதிக்கமைய அவர்களிடமிருந்து குத்தகையினை அறவிட்டு குத்தகை அடிப்படையில் அதனை வழங்குவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறும் தெரிவித்தார். (அ)

திவ்யா ஆர்யா

# மணிப்பூர் வன்முறை: பெண்கள் ‘வெறித்தனமாக’ குறிவைக்கப்படுவது ஏன்?

வடகிழக்கு இந்திய மாநிலமான மணிப்பூரில் பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான புதிய குற்றச்சாட்டுகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன.

இரண்டு பெண்களை ஒரு “வெறிபிடித்த” கும்பல் நிர்வாணமாக இழுத்துச் சென்றதைக் காட்டும் வீடியோ ஒன்று அண்மையில் வைரலான நிலையில், இதுபோல் பாதிக்கப்பட்டவர்கள் இப்போது பேசத் தொடங்கியுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கும் மேலாக, குகி பெண்ணான மேரிக்கு (அவரது உண்மையான பெயர் அல்ல) காவல்துறையிடம் செல்லும் தைரியம் வரவில்லை.

அவரது 18 வயது மகள் அவர்களின் வீட்டு வாசலில்



இருந்து கடத்தப்பட்டு, ஒரே இரவில் கூட்டுப் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு, அடுத்த நாள் காலையில், படுகாயங்களுடன் வீட்டு வாசலில் விடப்பட்டார்.

தன் மகளுக்கு நேர்ந்த இந்தக் கொடுமை குறித்து வெளியில் சொன்னால் கொலை செய்துவிடப் போவதாக அவர்கள் மிரட்டியதாக மேரி மனவேதனையுடன் கூறுகிறார்.

மணிப்பூரில் மெய்தேய் மற்றும் குகி சமூகங்களுக்கு இடையே இன மோதல்கள் வெடித்ததில் இருந்து 130க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனால் மேரியும் அவரது அண்டை வீட்டாரும் வீடுகளைவிட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் வசித்து வருகின்றனர். இந்த நிவாரண முகாமுக்கு வெளியில் அவரைச் சந்தித்துப் பேசியபோது, இந்த விவரங்களை அவர் தெரிவித்தார்.

இரண்டு குகி பெண்களை ஒரு கும்பல் நிர்வாணமாக இழுத்துச் சென்ற வீடியோ காட்சிகள் சமூக ஊடகங்களில் கடந்த வாரம் வெளியாகி நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

இந்தச் சம்பவத்திற்கு எதிராக பொதுமக்கள் பெரும் சீற்றம்கொண்ட நிலையில், இந்த வீடியோ ஆறு பேர் கைது செய்யப்படுவதற்கு வழிவகுத்தது.

இந்தக் கைது நடவடிக்கையைத் தொடர்ந்து மேரியும் தனது மகளுக்கு நேர்ந்த அவலம் குறித்து போலீசில் புகார் செய்தார்.

“இப்போது இதைச் செய்யாவிட்டால், எனக்கு இன்னொரு வாய்ப்பு கிடைக்காது என்று நினைத்தேன்,” என்கிறார் மேரி.

“என் மகளை பாலியல்ரீதியாகத் தாக்கியவர்களுக்குத் தண்டனை பெற்றுத்தர முயலவில்லையே என்ற கவலையில் இதுவரை இருந்தேன். இப்போதுதான் சற்று ஆறுதலாக உள்ளது.”

**கதவை உடைத்து உள்ளே நுழைந்த கும்பல்**

இந்தச் சம்பவத்தால் மிகுந்த மனவேதனை அடைந்தாலும், தனது மகள் தற்கொலை முயற்சியில் இறங்கவில்லை எனக் கூறும் மேரி, இனிமேலும் வாழ்க்கையில் ஏதாவது ஒன்றைச் செய்து சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை அவருக்கு ஊட்டியிருப்பதாகவும் கூறுகிறார்.

பத்தொன்பது வயதான சீயின் சியான்ச்சிங், தானும் இதுபோன்ற கொடூரத் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சூழலில் சிக்கியதாக அச்சத்துடன் கூறுகிறார்.

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் செவிலியர் படிப்பு படித்து வந்த அவரும், அவரது தோழியும் குகி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் மாணவியர் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டதாகவும், அவர் தங்கியிருந்த விடுதி தாக்கப்பட்டதாகவும் கூறுகிறார்.

“உங்கள் ஆண்கள் எங்கள் பெண்களை பாலியல் வல்லுறவு செய்துவிட்டார்கள். இப்போது நாங்கள் உங்களை வல்லுறவு செய்யப் போகிறோம் எனக் கூச்சலிட்டு, விடுதியில் அவர் மறைந்திருந்த அறைக் கதவுகளை ஒரு கும்பல் தட்டிக்கொண்டே இருந்தது,” என்கிறார் அவர்.

அப்போது தனது அம்மாவைத் தொடர்புகொண்டு பேசிய சீயின் சியான்ச்சிங், அதுதான் அவருடனான கடைசி பேச்சு என்று கூறியிருக்கிறார். அதன் பிறகு சில நிமிடங்களில் கதவை உடைத்து உள்ளே நுழைந்த அந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள், இரண்டு இளம் பெண்களையும் தரையில் இழுத்துச் சென்று வெறித்தனமாகத் தாக்கியுள்ளனர்.

இதில் இருவரும் மயக்கமடைந்துவிட்டனர். ஆனால் அவர்கள் இருவரும் இறந்துவிட்டதாகக் கருதி அந்த கும்பல் தப்பியோடிவிட்டதாக சீயின் சியான்ச்சிங் கூறினார். பின்னர் அந்தப் பெண்களைக் கண்டுபிடித்த போலீசார், அவர்களுக்கு நாடித் துடிப்பு இருந்ததைக் கண்டு உயிர் இருந்ததை உணர்ந்தனர் என்றும் அச்சத்துடன் அவர் நினைவுகூர்கிறார்.

மெய்தேய் பெண்கள் குகி ஆண்களால் பாலியல் வன் கொடுமைக்கு ஆளாகிறார்கள் என்ற உறுதிபடுத்தப் படாத தகவல்கள், இந்த மெய்தேய் ஆண்களின் கும்பலை சீயின் மற்றும் அவரது தோழிக்கு எதிராகத் தூண்டிவிட்டுள்ளன.

கடந்த மே மாதத் தொடக்கத்தில் மோதல் வெடித்த பிறகு தவறான தகவல்கள் வெகு ஆழமாகப் பரப்பப்பட் டன. இந்தத் தவறான தகவல்கள், ஏற்கெனவே ஒருவருக் கொருவர் இணைந்து வாழ்ந்த இரண்டு சமூகங்களை முழுமையாகப் பிரித்தன என்று கருதுமளவுக்கு மோச மானவையாக இருந்தன.

இப்போது இந்த இரண்டு சமூகங்களும் வாழும் கிராமங்களின் நுழைவாயிலில் தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இரவு நேரத்தில் மோதல்கள் தொடர்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



ஆனால் இரண்டு குகி பெண்களை நிர்வாணமாக இழுத்துச் சென்ற வீடியோ, மெய்தேய் பெண்களையும் ஒன்று சேர்த்து, அவர்களிடமும் பெரும் எதிர்ப்பைக் கிளப்பியுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் ஒரு சக்தி வாய்ந்த, நீண்ட கால பாரம்பரியத்தைக் கொண்ட மகளிர் அமைப்பான மெய்ரா பைபிஸ், அந்த மாநில சிவில் சமூகத்தில் பெண்களின் சக்திவாய்ந்த பங்கை உணர்த்துகிறது.

“தீப்பந்தம் ஏந்திய பெண்கள்”, “இமாஸ்” அல்லது “மணிப்பூரின் மாதாக்கள்” எனப் பல பெயர்களில் மெய்ரா பைபிஸ் அமைப்பைச் சேர்ந்த பெண்கள் அழைக்கப்படுகிறார்கள். இந்த அமைப்பினர் அரசு மற்றும் ராணுவத்தின் அதிகார துஷ்பிரயோகம், மனித உரிமை மீறல்களுக்கு எதிராக கடந்த பல ஆண்டுகளா கப் போராடி வருகின்றனர்.

தற்போது வெளியான வீடியோவில் காட்டப்பட்ட இரண்டு குகி பெண்களை பாலியல் வல்லுறவு செய்த குற்றவாளிகளை அவர்களுடைய கிராம மக்களே போலீசாரிடம் பிடித்துக் கொடுத்ததாக அந்த கிராமத் தில் மெய்ரா பைபிஸ் குழுவை வழிநடத்தும் சைனம் சர்னலதா லீமா கூறுகிறார்.

பின்னர் மெய்ரா பைபிஸ் குழுவின் உள்ளூர் உறுப்பினர்கள் ஒன்றுகூடி குற்றம் சாட்டப்பட்ட நபரின் வீட்டை எரித்தனர்.

“அந்த வீட்டை எரித்தது, அந்த நபர் செய்த கொடூர மான குற்றத்திற்கு, அவருடைய சமூகமே அளித்த தண்டனை. மெய்தேய் சமூகத்தின் மீது இருக்கும் மரியாதையை அந்த குற்றவாளிகளின் செயல்கள் கெடுத்து விடக் கூடாது என்பதால்தான் அந்த வீட்டுக்குத் தீ வைக்கப்பட்டது,” என்று லீமா கூறுகிறார்.

மேலும், குற்றம் சாட்டப்பட்டவரின் மனைவி மற்றும் மூன்று குழந்தைகள் கிராமத்தை விட்டு வெளியேற்றப்பட் டுள்ளனர்.

ஆனால், பெண்களை உயர்வாகக் கருதும் சமூகத்தில் அந்தக் கும்பல் ஏன் அப்படி நடந்துகொண்டது?

“குகி ஆண்களால் தாக்கப்பட்ட மெய்தேய் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டதற்கு பழிவாங்கும் நோக்கத்தில் இதுபோல் அந்த கும்பல் செயல்பட்டுள்ளது,” என்று லீமா கூறுகிறார்.

இதுபோன்ற தாக்குதல்கள் நடந்ததாக அவருக்கு தனிப்பட்ட முறையில் எதுவும் தெரியாது. மெய்தேய் பெண்கள் இதுபோன்ற அவமானகரமான விஷயங்கள் குறித்துப் பொதுவாக விவாதிப்பதில்லை.

தற்போதைய மோதலின் தொடக்கத்தில், மெய்தேய் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து தங்களுக்கு எந்தப் புகாரும் வரவில்லை என்று மாநில காவல்துறை கூறியுள்ளது. ஆனால் இதுபோன்ற தாக்குதல்கள் பல இடங்களில் நடந்ததாகவும், அவை குறித்து புகார் செய்ய யாரும் முன்வரவில்லை என்றும் மெய்தேய் சமூகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் என்னிடம் கூறினார்.

“எங்கள் பெண்கள் தாங்கள் எதிர்கொள்ளும் இது போன்ற கொடூரங்களைப் பற்றி வெளிப்படையாகப் பேசுவதன் மூலமோ அல்லது காவல்துறையில் புகார் செய்வதன் மூலமோ தங்கள் கண்ணியத்தை இழக்க விரும்புவதில்லை,” என்கிறார் கோகோமி என்ற மெய்தேய் அமைப்பைச் சேர்ந்த குரைஜாம் அத்துபா.

அவரது பார்வையில் பாலியல் வன்முறைகளில் கவனம் செலுத்துவதை விட, கொலைகளைத் தடுப்பதிலும், இடம்பெயர்ந்த மக்கள் பிரச்னையிலும் கவனம் செலுத்துவதுதான் சரி என்கிறார்.

**கடும் வேதனையில் தவிக்கும் சகோதரர்**

வன்முறை கும்பலால் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட குகி இனத் தைச் சேர்ந்த இரண்டு பெண்களில் ஒருவரின் சகோதரர், அந்தப் பெண் ணுக்கு நேர்ந்த கொடுமைகளை நினைத்து கடும் வேதனையில் தவித்து வருகிறார்.

அவரது சகோதரியைத் தாக்கி பாலியல் வல்லுறவு செய்த கும்பல், அவர்களின் தந்தையையும், தம்பியையும் கொன்று விட்டது. அவரும் அவரது தாயும் மற்றொரு கிராமத்தில் உறவினர் வீட்டுக்குச் சென்றிருந்ததால் அவர்களின் உயிர் தப்பியது.


தனது உறவினர் வீட்டில் உள்ள சிறிய அறை ஒன்றில் முடங்கிக் கிடந்த 23 வயதான அந்த இளைஞரை நான் நேரில் சந்தித்தேன்.

நான் அவரிடம் பேசியபோது, அரசும், காவல்துறை யும் என்ன செய்ய வேண்டும் என அவர் விரும்புகிறார் எனக் கேட்டேன்.

அதற்குப் பதிலளித்த அவர், “அந்த கொடூரக் கும்ப லில் உள்ள ஒவ்வொருவரையும் கைது செய்யவேண்டும். குறிப்பாக என் தந்தையையும் சகோ தரனையும் கொன்ற வர்களைக் கைது செய்யவேண்டும்,” என்று கூறினார்.


மேலும், “இரு சமூகங்களையும் நேர்மையுடன் நடத்துங்கள்,” என கோரிக்கை வைக்க விரும்புவதாகவும் அவர் கூறினார்.

மத்திய, மாநில அரசுகள் மீது இரு சமூகத்தினரிடமும் நம்பிக்கை இல்லை என்று கள நிலவரங்கள் காட்டுகின்றன.



# இந்தியா - இலங்கை இடையே பாலம்: ‘இராமர் பாலம்’ சேதமடையுமா?

ரஞ்சன் அருண் பிரசாத்



இலங்கை, இந்தியாவை இணைக்கும் வகையில் பாலம் ஒன்றை அமைப்பது தொடர்பான பேச்சு மீண்டும் தொடங்கியுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின்போது இந்த விஷயம் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பாலத்தை அமைப்பது உண்மையில் சாத்தியமா? இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைப்பதால் “ராமர் பாலம்” என்று நம்பப்படும் சுண்ணாம்புத் திட்டுகளுக்கு பாதிப்பு ஏற்படுமா? இவை குறித்து இங்கு விரிவாகப் பார்ப்போம்.

இரண்டு நாடுகளையும் இணைக்கும் வகையிலான பல்வேறு திட்டங்கள் தொடர்பாக, ரணில் விக்ரமசிங்கவின் இந்திய பயணத்தின்போது, இந்திய பிரதமர் நரேந்திர மோடி கலந்தாலோசித்துள்ளார்.

குறிப்பாக இரு நாடுகளுக்கும் இடையிலான படகு சேவையை மீள ஆரம்பித்தல், விமான சேவைகளை விஸ்தரித்தல், குழாய் மின் இணைப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தொடர்பாக இருநாட்டு தலைவர்களும் கலந்துரையாடினர்.

இதில் இரண்டு நாடுகளுக்கும் இடையே தரைவழிப் பாதையை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்படும் என இந்திய பிரதமர் தெரிவித்துள்ளார்.

**இந்தியா - இலங்கைக்கு இடையே பாலம் அமைக்கும் திட்டம்**

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் பாலம் அமைக்கும் திட்டம் தொடர்பில் பல ஆண்டு காலமாகப் பேசப்பட்டு வருகின்றது.

இந்த பாலத்தை அமைப்பது தொடர்பில் 2015ஆம் ஆண்டு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

தனுஷ்கோடி, தலைமன்னார் ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் 35 கோடி ரூபாய் செலவில் இந்த பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டு வந்ததாக அந்த காலப் பகுதியில் இந்திய ஆளும் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

இதற்கான நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளும் திட்டங்கள் குறித்தும் அப்போது கலந்தாலோசிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் 2015ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்க, இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட தருணத்தில் பிரதமர் நரேந்திர மோடி இந்த விடயம் குறித்து அப்போதும் கலந்துரையாடியுள்ளார்.

இந்தத் திட்டத்திற்கான நிதியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தயாராக இருந்தது என இந்தியாவின் அப்போதைய மத்திய அமைச்சர் நிதின் கட்கரி அப்போது தெரிவித்திருந்தார்.


தெற்காசிய பிராந்திய போக்குவரத்து வழித்தடங்களை இணைக்கும் வகையில் இந்தத் திட்டத்தை முன்னெடுக்க அப்போது யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

எனினும், அதற்குப் பிறகு அந்தப் பேச்சுவார்த்தைகள் கைவிடப்பட்டன.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த நேரத்தில், பிரதமர் நரேந்திர மோடியால் முன்வைக்கப்பட்ட அதே திட்டத்தை, ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னரும், நரேந்திர மோடி முன்வைத்துள்ளார்.

**‘ராமர் பாலம்’ என்று அழைக்கப்படும் திட்டுக்கள்**

இலங்கை, இந்தியாவை இணைக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் கூறப்படும் இயற்கையான வடிவங்கள் ‘இராமர் பாலம்’ அல்லது ‘ஆதாமின் பாலம்’ என அழைக்கப்படுகின்றது.



ராமேஸ்வரம், மன்னார் பகுதிகளை இணைக்கும் வகையில் சுண்ணாம்புக் கற்களால் ஆன இந்த வடிவம் சுமார் 30 கி.மீ. தூரத்திற்கு அமைந்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் பாலம் கட்டப்படும் என்றால், இந்தப் பாலத்தைச் சார்ந்து அமைக்கப்படுமா அல்லது வேறு விதமாக அமைக்கப்படுமா என இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

**நிலவியல் ரீதியாக பாலம் அமைப்பது சாத்தியமா?**

நிலவியல் ரீதியாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பது சாத்தியம்தான் எனக் கூறுகிறார் பேராசிரியர் எஸ்.ஏ.நோர்பட்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிலவியல் துறை முன்னாள் சிரேஷ்ட பேராசியரான இவர் பேசியபோது, இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலுள்ள கடல் பகுதி மிகவும் ஆழம் குறைவானது என்பதால் மிக எளிதாகப் பாலம் அமைக்க முடியும் என்றார்.

சேது சமுத்திர திட்டம் பல ஆண்டுக் காலமாகப் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், அதிலுள்ள நடைமுறை சவால்களைப் போல் இந்தத் திட்டத்தில் ஏதேனும் சவால்கள் உள்ளனவா எனக் கேட்டபோது “இதில் அப்படியான சவால் ஏதும் இல்லை” என்கிறார் எஸ்.ஏ.நோபர்.

சேது சமுத்திர திட்டம் சாத்தியமில்லை என்ற போதிலும், இலங்கை - இந்தியாவுக்கு இடையில் பாலம் அமைப்பது சாத்தியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

“இந்தப் பாலம் அமைப்பது பெரிய விஷயம் இல்லை. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் இருக்கும் கடல் பகுதி ஆழம் குறைவானது. அந்த ஆழம் குறைவான பகுதிகளின் ஊடாக காங்க்ரீட் தூண்களை நிறுத்தி, பாலம் அமைக்க முடியும். இதில் ஒரு பிரச்னையும் கிடையாது. அது பாலம் அமைப்பதற்குச் சாத்தியமான பகுதிதான்,” என்றார் நோபர்ட்.

ஆனால், இது புவியியல் ரீதியாக இலங்கையைப் படிப்படியாகத் தங்களுடைய பிரதேசமாக்குவதற்கான இந்தியாவின் முதல் படி என்றும் கூறினார்.

“பாலம் ஒன்று அமைக்கப்படும் போது, போக்குவரத்து உள்ளிட்ட அனைத்தும் தங்களுடைய கைக்குள் வந்துவிடும். சீனா உள்ளிட்ட பல நாடுகள் கடலுக்குள் பாலங்களை அமைத்துள்ளன. ஆகவே, தற்போதுள்ள தொழில்நுட்ப வசதிகளின் மூலம் இது சாத்தியப்படக்கூடிய விஷயம்தான்,” என்கிறார் பேராசிரியர் எஸ்.ஏ.நோபர்ட்.

“தனுஷ்கோடியிலிருந்து பாதை அமைப்பது இலகுவானது. அவ்வளவு தூரம் கிடையாது. தனுஷ்கோடியிலிருந்து கடலுக்குள் பாக் நீரிணையின் ஊடாகப் பாலம் அமைக்க முடியும்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடைப்பட்ட பகுதியில் சுண்ணாம்புக் கற்கள் நிரம்பியுள்ளன. அந்தச் சுண்ணாம்புக் கற்களில்தான் தூண்களை இறக்கி பாலம் அமைப்பார்கள். தனுஷ்கோடியிலுள்ள ரயில் பாலத்தைப் போன்றதொரு பாலத்தை அமைப்பார்கள்,” என்று அவர் விளக்கினார்.

**சுண்ணாம்புக் கற்கள் சேதமாகுமா?**

இந்தப் பாலம் அமைக்கப்படும் போது, பாக் நீரிணையில் உள்ள சுண்ணாம்புக் கற்களுக்கு சேதங்கள் ஏற்படும் சாத்தியம் உள்ளதா?

என கொழும்பு பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர் எஸ்.ஏ.நோர்பட்டிடம் வினவினோம்.

இதுகுறித்து விளக்கமளித்த நோபர்ட், “அது மிகப்பெரிய சுண்ணாம்புத் திட்டு” என்றும் பாலம் அமைப்பதால் அதில் எந்தவித சேதமும் ஏற்படாது எனவும் கூறினார்.



### மட்டக்களப்பு ஒருங்கிணைப்பு கூட்டத்தில்

# மக்களின் நலன் சார்ந்த திட்டங்களுக்கு அனுமதி






மட்டக்களப்பு, ஜூலை 27

மட்டக்களப்பு மாவட்டத்தின் இவ்வாண்டின் ஜூலை மாதத்திற்கான அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அதன் தலைவரும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமட் ஆகியோரின் பங்கேற்புடன் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜாவின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வர்த்தக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரன் மற்றும் இரா.சாணக்கியன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் கலந்துகொண்டு மக்கள் சார்ந்த பல்வேறுபட்ட பிரச்னைகள் தொடர்பில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தியதுடன், அவற்றிற்கான பல்வேறுபட்ட தீர்வுகள் தொடர்பாகவும் தமது ஆலோசனைகளை முன்வைத்தனர்.

குறிப்பாக இந்த மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த மாவட்டத்தின் விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், சுற்றாடல் உட்பட ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதுடன், பல்வேறு மக்கள் நலன்சார்ந்த திட்டங்களுக்கு இதன்போது ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் உள்ளிட்ட இணைத்தலைவர்களினால் அனுமதியளிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநரின் பணிக்குழுவினர் உள்ளிட்ட உயரதிகாரிகள், மட்டக்களப்பு மாவட்ட செயலக உயரதிகாரிகள், உள்ளூராட்சிச் சபைகளின் உயரதிகாரிகள், மாவட்ட பொலிஸ் திணைக்கள உயரதிகாரிகள், மற்றும் பிரதேச செயலாளர்கள், ஏனைய திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட திணைக்களங்கள் சார் உயரதிகாரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டனர். (அ)

# குடும்பஸ்தர் உயிர்மாய்ப்பு

மட்டக்களப்பு, ஜூலை 27

இளம் குடும்பஸ்தர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தனது உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவமொன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி - நாவலடி எனும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மனைவி வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் அண்மைக் காலமாக தொலைபேசி உரையாடல் மூலம் கணவன், மனைவிக்கு இடையில் முரண்பாடு தோன்றியுள்ளது.

இதன் தொடரிலேயே கணவன் தனது உயிரை மாய்த்துள்ளதாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

இவ்வாறு உயிரை விட்ட நபர் திருகோணமலை - கிண்ணியா பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவர் ஓட்டமாவடி - நாவலடி பகுதியில் திருமணம் முடித்து இரண்டு பிள்ளைகளுடன் வசித்து வந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பால்நிலை சமத்துவம் பற்றி சகவாழ்வு சங்க உறுப்பினர்களுக்கு செயலமர்வு



காரைதீவு, ஜூலை 27

மனித அபிவிருத்தி தாபனத்தால் அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வு சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் ஒரு செயற்பாடாக சகவாழ்வு சங்க உறுப்பினர்களுக்கான பால்நிலை சமத்துவம் தொடர்பான செயலமர்வு மனித அபிவிருத்தி தபான உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் தலைமையில் நடைபெற்றது.

இச் செயலமர்வுக்கு வளவாளராக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனித்தா மோகன் கலந்து கொண்டு விளக்கவுரை வழங்கினார்.

இக் கருத்தரங்கானது காரைதீவு, கல்முனை பிரதேசங்களில் இரண்டு நாட்கள் நடைபெற்றது. இச் செயலமர்வுக்கு காரைதீவு, கல்முனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சகவாழ்வு சங்கங்களின் உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். (அ)






# சாணக்கியன் - பிள்ளையான் இடையே கடும் வாக்குவாதம்!

## அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் சலசலப்பு

மட்டக்களப்பு, ஜுலை 27

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போது தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை நோக்கி, ஆளும் தரப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தகாத வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தியமையால் அங்கு சர்ச்சை ஏற்பட்டது.

மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அத்தோடு, அரச அதிகாரிகள், பாதுகாப்புப் பிரதானிகள் உள்ளிட்டவர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தில் நிலவும் பல்வேறு பிரச்னைகள் தொடர்பாக கருத்துக்கள் வெளியிடப்பட்ட நிலையில், அண்மையில் பொலனறுவை, மன்னம்பிட்டிய பகுதியில் விபத்துக்குள்ளான பஸ் விவகாரம் குறித்தும் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சபையின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.



குறித்த தனியார் பஸ் சேவைக்கு இரண்டு அனுமதிப் பத்திரங்கள் மாத்திரம் இருக்கும் நிலையில், சட்டவிரோதமான முறையில் பல வழித்தடங்களில் அது இயங்குவதாக குற்றஞ்சாட்டியிருந்தார்.

விபத்துக்குள்ளான வழித்தடத்தில் பயணிக்க குறித்த தனியார் பஸ் சேவைக்கு அனுமதி இல்லாத நிலையில், நேற்று முன் தினம் இரவும், குறித்த பஸ் சேவைக்கு சொந்தமான பஸ்ஸை பொலனறுவைப் பகுதியில் வைத்து தான் கண்டதாகவும் சாணக்கியன் தெரிவித்தார்.

இந்த விவகாரங்கள் தொடர்பாக அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், தன்னால் வழங்கப்பட்ட காணொளியொன்றை ஒளிபரப்புமாறு அதிகாரிகளிடத்தில் கோரினார்.

இதன்போது குறுக்கிட்ட ஆளும்தரப்பு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், அவ்வாறு காணொளிகளை ஒளிபரப்ப முடியாது என்று எதிர்ப்பை வெளியிட்டார்.

எனினும், இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் காணொளியொன்றை ஒளிபரப்ப முடியுமானால் தனக்கும் அந்த உரிமையை வழங்கவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தொடர்ந்தும் குரல் எழுப்பிய நிலையிலேயே இந்த முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினரான சிவநேசதுரை சந்திரகாந்தன் சாணக்கியனை நோக்கி, ஒருமையில் பேசியதுடன் தகாத வார்த்தைப் பிரயோகத்தையும் பயன்படுத்தினார்.

இதனால் இரு உறுப்பினர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டதுடன், அமர்விலும் சலசலப்பு ஏற்பட்டது. (அ)

# திருமலை அரச அதிபராக சாமிந்த ஹெட்டியாரச்சி


திருமலை, ஜுலை 27

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிருவாக சேவையின் விசேட தர சேவையை சேர்ந்த சாமிந்த ஹெட்டியாரச்சி நியமிக்கப்படுள்ளார்.

இவர் நாளை வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் கடமைகளை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்பார்.

மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றிய பி. எச்.என்.ஜயவிக்ரம ஓய்வு பெற்றதனை தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை திறந்த பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட இவர் 2000 -2006 ஆம் ஆண்டு வரை திருகோணமலை மாவட்டத்தின் கோமரங்கடவெல பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் உதவி செயலாளர், சிரேஸ்ட உதவி செயலாளர், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். (அ)



# கைத்தொலைபேசிகளை களவாடி விற்பனை செய்த கும்பல் சிக்கியது

அம்பாறை, ஜுலை 27

நீண்ட காலமாக கைத்தொலைபேசிகளை திருடி விற்பனை செய்து வந்த கும்பல் கல்முனை தலைமையக பொலிஸாரிடம் சிக்கியுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பல்வேறு இடங்களில் கைத்தொலைபேசிகள் சூட்சுமமாக களவாடி செல்லப்பட்டுள்ளதாக பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எஸ். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 2 சந்தேக நபர்களை கடந்த திங்கட்கிழமை மாலை கைது செய்தனர்.

இந்த நடவடிக்கையில் கைதாகிய 2 சந்தேக நபர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன்



ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு பொலிஸாரினால் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விசாரணையின்போது கைதானவர்களின் வாக்குமூலத்தின் படி வைத்தியசாலைகளில் நோயாளிகள், பார்வையாளர்கள் ஆகியோரை பிரதானமாக இலக்கு வைத்து சக நோயாளர்களாகவும் சிற்றுழியர்களாகவும் நடித்து சூட்சுமமாக இக்கைத்தொலைபேசிகளைத் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது. (அ)

# அமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு எம். பிக்கள் கடும் கண்டனம்!

மட்டக்களப்பு, ஜுலை 27

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின்போது, அரச உத்தியோகத்தர்களைத் தாக்கிப் பேசிய அமைச்சர் நஸீர் அஹமட்டுக்கு தக்க பதிலடி கொடுத்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அரச அதிகாரிகளுக்கும் கடும் உத்தரவுகளைப் பிறப்பித்து, பிரச்னையை சுமூகத்துக்குக் கொண்டு வந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அம்மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவனேசதுறை சந்திரகாந்தன் தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்றது.

அபிவிருத்திக் குழுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் காணப்படாத விடயங்கள் குறித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் கேள்வி எழுப்பி, அரச அதிகாரிகளுக்கு தர்மசங்கடமான நிலைமையை ஏற்படுத்திய சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் மீது, கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கடும் விமர்சனங்களை முன்வைத்தனர்.

இந்த கூட்டத்தின் போது, நிகழ்ச்சி நிரலில் காணப்படாத விடயங்கள் தொடர்பான தரவுகள் குறித்த கேள்விகளை, கல்வி அமைச்சின் செயலாளரிடம் அமைச்சர் நஸீர் அஹமட் எழுப்பினார். இதன்போது, அந்தத் தரவுகள் தற்போது தன்வசம் இல்லை என்றும் இன்று மாலை வேளைக்குள் அவற்றை அமைச்சரிடம் கையளிக்க ஏற்பாடு செய்வதாகவும் செயலாளர் தெரிவித்தார்.

இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ளாத அமைச்சர், கல்வி அமைச்சின் செயலாளரைக் காரசாரமான வார்த்தை ஜாலங்களால் தாக்க முற்பட்ட போது குறுக்கிட்ட ஆளுநர் தரவுகளை உடனடியாக எவ்வாறு வழங்க முடியும் என்றும் மாலை வேளைக்குள் அவற்றை வழங்க ஏற்பாடு செய்யுமாறு செயலாளருக்கு பணிப்புரை விடுத்தார். இருப்பினும், அமைச்சர் அவ்விடயம் தொடர்பில் செயலாளர் மீது தொடர்ந்தும் விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டே இருந்தார்.

இதனையடுத்து, அக்கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அபிவிருத்திக் குழுத் தலைவர் சி.சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரன், இரா. சாணக்கியன் ஆகியோரும், நிகழ்ச்சி நிரலுக்கு உட்படாத விடயங்கள் தொடர்பான தரவுகளைக் கேட்டு அரச அதிகாரிகளை தொந்தரவுக்கு உட்படுத்துவது நாகரிகமற்ற செயல் என்றும் அந்தத் தரவுகளை வழங்க செயலாளருக்கு கால அவகாசம் வழங்குமாறும் அறிவுறுத்திய தோடு கடும் கண்டனம் வெளியிட்டனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆளுநர் செந்தில் தொண்டமான், இவ்வாறான உயர்ந்தபட்ச சபையில் அனைவரும் நாகரிகமாக நடந்து கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியதுடன், அரச அதிகாரிகளின் கண்ணியத்தைக் காக்கவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது என்றும் அரச அதிகாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் கூறினார்.

அத்துடன், நிகழ்ச்சி நிரலில் காணப்படாத விடயங்கள் தொடர்பான தரவுகளைக் கோருவது மாத்திரமன்றி, அவற்றை அவர்கள் வழங்குவதற்கு கால அவகாசம்கூட வழங்காதிருப்பது, அரச அதிகாரிகளின் உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் தான் இருக்கும் சபையில் அவ்வாறான செயல்களுக்கு ஒரு போதும் அனுமதி வழங்க முடியாது என்றும் ஆளுநர் எச்சரிக்கை விடுத்தார்.

மேலும், இவ்வாறான சபையில் மக்கள் பிரதிநிதிகள் எழுப்பும் கேள்விகளுக்கு உடனடியாக பதில் வழங்க முடியாவிட்டால், 24 மணித்தியாலங்களுக்கு அத்தரவுகளை எழுத்து மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அரச அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்த ஆளுநர், அரச அதிகாரிகள் தம் பணிகளைத் திறம்படச் செய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

(அ)

# பொலிஸாரின் உத்தரவை மீறி சென்ற மோ.சைக்கிள் மீது சூடு

அம்பாறை, ஜுலை 27

அம்பாறை - தீகவாபி பிரதான வீதியின் மாணிக்கமடு பாலத்திற்கு அருகில் பொலிஸாரின் உத்தரவை மீறி பயணித்த மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்ற பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த நபர் வலது காலில் காயமடைந்த நிலையில் அம்பாறை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை போக்குவரத்து பொலிஸார் வீதி சமிக்ஞைக்கு அருகில் நிறுத்துமாறு உத்தரவிட்டபோதும் மோட்டார் சைக்களில் பயணித்த இருவரும் அதனை பொருட்படுத்தாது பயணிக்க முற்பட்ட போது பொலிஸார் அவர்களை துரத்திச்சென்று துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற வரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# நாசாவில் மின்தடை!

## விண்வெளி வீரர்களுடனான தொடர்பு துண்டிப்பு



நியூயோர்க், ஜூலை 27

**அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவில் நேற்றுமுன்தினம் திடீரென மின்தடை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக விண்வெளி வீரர்கள் உடனான தொடர்பு 90 நிமிடங்கள் வரை துண்டிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதனையடுத்து பக்அப் கன்ட்ரோல் சிஸ்டம் மூலமாக விண்வெளி மையத்துடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

குறித்த மின்தடையால் வீரர்களுடனான தொடர்பு சுமார் 90 நிமிடங்களுக்கு துண்டிக்கப்பட்டு இருந்ததாகவும், இதனையடுத்து ரஷ்யாவின் தகவல் தொடர்பு அமைப்பின் மூலமாக 20 நிமிடத்தில் இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டதாக நாசா தெரிவித்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மற்றும் விண்வெளி மையத்துடன் தொடர்பு கொள்ள நாசாவில் தனியாக கட்டுப்பாட்டு மையம் உள்ளது. ஒருவேளை இந்த மையம் வேலை செய்யவில்லை என்றால், இதற்கு மாற்று திட்டம் வகுத்துள்ளது. முதன் முறையாக விண்வெளி மையத்தை தொடர்பு கொள்ள நாசா இந்த மாற்று ஏற்பாட்டை பயன்படுத்தியுள்ளது.

இதுறித்து விண்வெளி நிலைய திட்ட மேலாளர் ஜோல் கூறுகையில் “விண்வெளி வீரர்களுக்கோ, நிலையத்திற்கு எந்தவொரு ஆபத்தும் இல்லை” எனத் தெரிவித்துள்ளார். (அ)

## சீனா செல்கிறார் ரஷ்ய ஜனாதிபதி



மொஸ்கோ, ஜூலை 27

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் சீனாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.


ஐரோப்பா மற்றும் ஆபிரிக்க நாடுகளுடன் ஆசியாவை இணைக்கும் கட்டமைப்பு திட்டங்களை உள்ளடக்கிய நிகழ்வொன்றில் பங்கேற்பதாக இந்த விஜயம் அமையவுள்ளதாக ரஷ்ய வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

சீனா விஜயத்தினைத் தொடர்ந்து அவர் துருக்கிக்கும் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்தியாவில் இடம்பெறவிருக்கும் ஜி 20 மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு ரஷ்ய ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த மாநாட்டில் பங்கேற்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## 115 அடி உயரம் கொண்ட புத்தர் சிலை தீயில் சேதம்




பீஜிங், ஜூலை 27

சீனாவின் கான்சு மாகாணத்தில் உள்ள ஷான்டன் பௌத்த விகாரையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் 115 மீற்றர் உயரம் கொண்ட பிரம்மாண்ட புத்தர் சிலை சேதம் அடைந்துள்ளது.

கி.பி. 425ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த சிலை ஒன்றை பார்த்து இப்புத்தர் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் , சிலையின் ஒரு பகுதி மட்டுமே தீயில் சேதம் அடைந்துள்ளதாகவும், விகாரையின் கலாச்சார நினைவுச்சின்னங்கள் சேதமடையாமல் இருப்பதாகவும் உள்ளூர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இத்தீ விபத்தில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை எனவும் இல்லை என்றும், விபத்துக்காண காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இந்திய மக்கள் தொகை 139 கோடியாக மதிப்பீடு



புதுடில்லி, ஜூலை 27

இந்தியாவின் மக்கள் தொகை, 139 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளதாக மக்களவையில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய மக்களவையில் கருத்து வெளியிட்ட மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்யானந்தா ராய் இந்தத் தகவலை கூறினார்.

கடந்த முதலாம் திகதிக்குரிய நிலைவரத்தின்படி, இந்தியாவின் மக்கள் தொகை 139 கோடியே 23 இலட்சத்து 29 ஆயிரம் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## இந்தியாவிடம் உதவி கோரும் சர்வதேச நாணய நிதியம்

புதுடில்லி, ஜூலை 27

அரிசி ஏற்றுமதித் தடையை நீக்குமாறு சர்வதேச நாணய நிதியம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் வட மாநிலங்களில் அண்மைக்காலமாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக அங்கு நெல் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தியாவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் விதமாக மத்திய அரசு, பாஸ்மதி அல்லாத அரிசி ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளது.

இதனால் அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேயா உள்ளிட்ட உலக நாடுகளில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதோடு அதன் விலையும் உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சுப்பர் மார்க்கெட்டுகளில் அரிசி வாங்க மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர். இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில் குறித்த ஏற்றுமதித் தடையை நீக்குமாறு சர்வதேச நாணய நிதியம் இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை பொருளாதார நிபுணர் பியர்-ஒலிவியர் கோரின்சாஸ் கருத்துத் தெரிவிக்கையில்-

இந்தியாவின் அரிசி ஏற்றுமதி தடையால் உலகம் முழுவதும் உணவு பண்டங்களின் விலை உயரும். சில நாடுகள் எதிர்வினை நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.

எனவே இத்தடையை நீக்கக் கோருகிறோம். 2022ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் இந்திய பொருளாதாரம் சற்று இறங்கி இருந்தாலும், ஒரு வலிமையான வளர்ச்சி தென்படுகிறது. எனவே இத்தடையானது தேவையற்றது - என்றார். (அ)

## ஜப்பானில் சனத்தொகையை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடு



கொழும்பு ,ஜூலை 27

ஜப்பானியர்களின் சனத்தொகை வரலாறு காணாத வேகத்தில் குறைந்துள்ளதாக அந்த நாட்டின் குடியுரிமைப் பதிவுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானிய குடிமக்களின் எண்ணிக்கை சுமார் 8 இலட்சத்தால் குறைவடைந்து 122.42 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது.

முதல் முறையாக, 47 மாகாணங்களிலும் ஜப்பானிய குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என்று அந்த தரவு காட்டுகிறது.

எனினும், அந்தநாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 3 மில்லியனாக உயர்ந்துள்ளதாக அந்த தரவுகள் குறிப்பிடுகின்றன.

ஜப்பானிய சமுதாயம் நாடு முழுவதும் முதுமை அடைந்து வருவதாகவும், சுருங்கி வரும், அந்த நாட்டின் சனத்தொகையை ஈடுசெய்வதில், வெளிநாட்டுப் பிரஜைகள் பெரும் பங்கை வகிப்பதாகவும் தரவுகள் காட்டுகின்றன.

அதன்படி, ஜப்பானில் வசிக்கும் வெளிநாட்டினரின் எண்ணிக்கை 2.99 மில்லியனாக இருந்தது.

இது முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.7 சதவீதம் அதிகரித்துள்ளது.

ஜப்பானின் மொத்த மக்கள் தொகை 125.42 மில்லியனாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இது சுமார் 5 இலட்சத்து 11 ஆயிரத்தால் குறைந்துள்ளது என்று புதிய தரவு காட்டுகிறது.

இந்தநிலையில், வீழ்ச்சியடையும் பிறப்பு விகிதத்தை மாற்றியமைப்பதற்கு தமது அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் புமியோ கிஷிடா அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக வருடாந்தம் 25 பில்லியன் அமெரிக்க டொலரை ஒதுக்க தமது அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)



## இன்ரர் மியாமி அணிக்காக 2 கோல்கள் அடித்தார் மெஸ்ஸி!

புளோரிடா, ஜுலை 27

இன்ரர் மியாமி கழக அணிக்காக உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர ஆட்டக்காரரான லயனல் மெஸ்ஸி அட்லாண்டா யுனைடெட் அணிக்கு எதிரான போட்டியில் இரண்டு கோல்களை பதிவு செய்து அசத்தினார். அதோடு சக வீரர் கோல் பதிவு செய்ய உதவியுமுள்ளார்.

ஆர்ஜென்ரீனா உதைபந்து அணியின் தலைவரான மெஸ்ஸி தற்போது அமெரிக்க நாட்டின் உதைபந்தாட்ட கழக அணியான இன்ரர் மியாமி அணிக்காக விளையாடி வருகிறார். கடந்த வெள்ளிக்கிழமை அன்று தான் தனது முதல் போட்டியில் இன்ரர் மியாமி அணிக்காக அவர் விளையாடியிருந்தார். இந்த போட்டியில் ஆட்டத்தின் இரண்டாவது பாதியில்தான் மெஸ்ஸி களம் கண்டார்.

இந்நிலையில், அட்லாண்டா யுனைற்றெட் அணிக்கு எதிரான போட்டியில் தொடக்கம் முதலே ஆடும் வாய்ப்பை மெஸ்ஸி பெற்றார். போட்டியின் 8ஆவது நிமிடத்தில் முதல் கோலை அவர் அடித்தார். தொடர்ந்து 22ஆவது நிமிடத்தில் மற்றொரு கோலை பதிவு செய்தார்.

போட்டியின் 53ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த பந்தை இலாவகமாக அப்படியே தட்டிச் சென்று, தனக்கு இடது பக்கம் இருந்த றொபேர்ட் ரெய்லரிடம் தட்டிக் கொடுத்தார். அதை சரியாக பயன்படுத்தி ரெய்லர் அதனை கோலாக மாற்றினார். இந்தப் போட்டியில் இன்ரர் மியாமி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் லீக்ஸ் கோப்பை தொடரின் 'ஜே' பிரிவில் 2 போட்டிகளில் விளையாடி இரண்டிலும் வெற்றி பெற்று ஆறு புள்ளிகளை பெற்றுள்ளது அந்த அணி.

## மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் அணி அறிவிப்பு




போர்ட் ஒவ் ஸ்பெயின், ஜுலை 27

இந்தியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி தொடரில் கலந்து கொள்ளும் மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஷிம்ரன் ஹெட்மயர், வேகப்பந்து வீச்சாளர் ஓஷன் தாமஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்தியா சென்றுள்ளது. இரு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை அந்த அணி 1 - 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த நிலையில் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் துடுப்பாட்ட போட்டி ஆரம்பமாகவுள்ளது.

இந்நிலையில் இந்த தொடருக்கான 15 பேர் கொண்ட மேற்கு இந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் அணித் தலைவர் நிக்கோலஸ் பூரண், சகலதுறை வீரர் ஜசன் ஹோல்டர் ஆகியோர் தெரிவாகவில்லை.

அணி விவரம்:

ஷாய் ஹோப் (அணித்தலைவர்), ரோவ்மன் பவல், அலிக் அத்தனாஸ், யானிக் கரியா, கீசி கார்டி, டொமினிக் டிரேக்ஸ், ஷிம்ரன் ஹெட்மேயர், அல்ஸாரி ஜோசப், பிரண்டன் கிங், கைல் மேயர்ஸ், குடகேஷ் மோட்டி, ஜெய்டன் சீல்ஸ், ரொமாரியோ ஷெப்பர்ட், ஓஷன் தாமஸ், கெவின் சின்க்ளேர்.

# உலகக் கிண்ணத் தொடர் நியூசி. அதிர்ச்சி தோல்வி!



வெலிங்டன், ஜுலை 27

பிபா பெண்கள் உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் வெலிங்டன் மைதானத்தில் 'ஏ' பிரிவில் நடைபெற்ற நியூசிலாந்து - பிலிப்பைன்ஸ் அணிகள் மோதின.

இதில் அறிமுக அணியான பிலிப்பைன்ஸ் 1-0 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சி அளிக்கும் வகையில் நியூசிலாந்தை தோற்கடித்தது.

நியூசிலாந்து அணி தனது முதல் ஆட்டத்தில் 1995ஆம் ஆண்டு சம்பியனான நோர்வே அணியை வீழ்த்தி உலகக்கிண்ண வரலாற்றில் தனது முதல் வெற்றியை பதிவு செய்து சாதனை படைத்திருந்தது.

இதேபோன்ற, செயல்திறனை பிலிப்பைன்ஸ் அணிக்கு எதிரான போட்டியிலும் நியூசிலாந்து வீராங்கனைகள் வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆட்டத்தின் 24ஆவது நிமிடத்தில் பிலிப்பைன்ஸ் அணிக்கு ப்றீகிக் வாய்ப்பு கிடைத்தது.

இதில் பொக்ஸ் பகுதிக்குள் உதைக்கப்பட்ட பந்தை நியூசிலாந்து வீராங்கனைகள் சரியாக விலக்கிவிடவில்லை. இதை பயன்படுத்தி சாரா எக்ஸ்விக் சரினா போல்டனுக்கு அனுப்ப, அவர் துள்ளியவாறு தலையால் முட்டி பந்தை கோல் வலைக்குள் திணித்தார்.

இதன் மூலம் உலகக் கிண்ணத்தில் பிலிப்பைன்ஸ் அணிக்காக முதல் கோலை அடித்த வீராங்கனை என்ற பெருமையை பெற்றார் சரினா போல்டன்.

நியூஸிலாந்து அணி 70ஆவது நிமிடத்தில் கோல் அடித்தது. ஆனால் அது ஒவ் சைற் என அறிவிக்கப்பட்டது. கடைசி வரை முயற்சி செய்தும் நியூசிலாந்து அணியால் பதில் கோல் அடிக்க முடியாமல் போனது.

(ஐ)

## பாகிஸ்தான் - இலங்கை டெஸ்ட் மழையால் பாதிப்பு

கொழும்பு, ஜுலை 27

இலங்கை - பாகிஸ்தான் அணிகள் இடையே கொழும்பு நகரில் நடைபெற்று வரும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2ஆவது நாள் ஆட்டம் மழை காரணமாக பாதிக்கப்பட்டது.


இந்த போட்டியில் இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 48.4 ஓவர்களில் 166 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக தனஞ்சய டி சில்வா 57, தினேஷ் சந்திமால் 34, ரமேஷ் மெண்டிஸ் 27, திமுத் கருணரத்னே 19 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பாகிஸ்தான் அணி சார்பில் அப்ரார் அகமது 4, நசீம் ஷா 3 விக்கெட்களை வீழ்த்தினர். இதையடுத்து விளையாடிய பாகிஸ்தான் அணி முதல் நாள் ஆட்டத்தின் முடிவில் 28.3 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 145 ஓட்டங்கள் எடுத்தது. இமாம் உல் ஹக் 6, ஷான் மசூத் 51 ஓட்டங்களில் அஷிதா பெர்னாண்டோ பந்தில் ஆட்டமிழந்தனர்.

அப்துல்லா ஷபிக் 74, அணித் தலைவர் பாபர் அஸம் 8 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். நேற்று 2ஆவது நாள் ஆட்டத்தை பாகிஸ்தான் அணி தொடர்ந்து விளையாடியது. 38.3 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 178 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் மழை காரணமாக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அப்போது அப்துல்லா ஷபிக் 87, பாபர் அஸம் 28 ஓட்டங்களுடன் இருந்தனர். தொடர்ந்து மழை பெய்ததால் 2ஆவது நாள் ஆட்டம் மேற்கொண்டு தொடரப்படவில்லை. பாகிஸ்தான் 12 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.





உலகக் கிண்ணத் தொடர்

## இளம் வயதில் கால்பதித்து கேசி பேயர் சாதித்தார்!

சிட்னி, ஜுலை 27

இளம் வயதில் உலகக் கிண்ணப் போட்டியில் கால் பதித்த வீராங்கனை என்ற பெருமையை கேசி பேயர் பெற்றுள்ளார்.

பெண்களுக்கான 9ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து நாட்டில் நடக்கிறது. இதில், பங்கேற்றுள்ள நடப்பு சம்பியன் அமெரிக்கா, முன்னாள் சம்பியன்கள் ஜேர்மனி, ஜப்பான், நோர்வே உள்ளிட்ட 32 அணிகள் 8 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒருமுறை மோத வேண்டும்.

இதில், சிட்னியில் நடந்த ("எச்" பிரிவு) போட்டி ஒன்றில் கொலம்பியா-தென்கொரியா அணிகள் மோதின. விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் கொலம்பியா 2-0 என்ற கோல் கணக்கில் தென்கொரியாவை வீழ்த்தி போட்டியை வெற்றியுடன் தொடங்கியது.

கொலம்பியா அணியில் கதலினா உஸ்மி 30ஆவது நிமிடத்தில் பெனால்டி வாய்ப்பிலும் லிண்டா காய்சிடோ 39ஆவது நிமிடத்திலும் கோலடித்தனர். அறிமுக வீராங்கனையாக களம்கண்ட 18 வயதான லிண்டா காய்சிடோ நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கோல் அடித்த இளம் வீராங்கனை என்ற பெருமையை தனதாக்கினார்.

இவர் புற்றுநோயில் இருந்து மீண்டு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த போட்டியில் தென்கொரியா அணிக்காக கேசி பேயர் 78ஆவது நிமிடத்தில் மாற்று வீராங்கனையாக இறங்கியது சாதனையாக அமைந்தது. அவரின் வயது 16 ஆண்டு 26 நாட்களாகும். இதன் மூலம் அவர் இளம் வயதில் உலகக் கிண்ணப் போட்டியில் கால்பதித்த வீராங்கனை என்ற சிறப்பை பெற்றார். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அரசின் சில சலுகைகள் நீக்கம்!

கொழும்பு, ஜுலை 27

**ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்திற்குப் புறம்பாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

ஜனாதிபதி சிறப்புரிமை சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி ஒருவருக்கு, வீடு, மூன்று வாகனங்கள், வாகனங்களுக்கான எரிபொருள், தனிப்பட்ட செயலாளர் நியமனம் ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன.

எனினும் கடந்த காலங்களில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் என்ற அடிப்படையில் நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை கேள்விக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புக்கு அமைவாக, ஜனாதிபதியின் சிறப்புரிமைகள் சட்டத்துக்கு அமைவாக செயற்படுமாறு நீதிமன்றம் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதன்படி, இனிமேல் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சிறப்புரிமை வழங்கும்போது, ஜனாதிபதி சிறப்புரிமைச் சட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்டுள்ள விடயங்கள் வெட்டப்படவேண்டும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ-கே)

# இ-பஸ் முன்னோடி திட்டம் ஆரம்பிப்பு

கொழும்பு, ஜுலை 27

வினைத்திறன் மற்றும் தரமான போக்குவரத்து சேவையை உருவாக்குவதற்காக 50 மின்சார பஸ்களை பயன்படுத்தி "இ-பேருந்துகள்" என்ற முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

லக்தீவ பொறியில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஸ்திரமான நாட்டிற்கு ஒரு வழி என்ற தொனிப்பொருளில் ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சார பஸ்களை பிரபலப்படுத்தும் வகையில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதே அமைச்சின் நோக்கமாகும் என இராஜாங்க அமைச்சர் கூறினார். (அ)

# சுற்றாடல் வலயத்தில் காணிகள் பிரிப்பது உடனடியாக நிறுத்தம்

கொழும்பு, ஜுலை 27

ஹந்தான அதியுச்ச சுற்றாடல் வலயத்தில் உள்ள காணிகளை 20 துண்டுகளாக பிரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை உடனடியாக நிறுத்துமாறு மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு. கமகே உத்தரவிட்டுள்ளார்.

கண்டி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இது தொடர்பில், ஹந்தான வத்த ஐக்கிய நன்மையாளர் சங்கம் சமர்ப்பித்த கடிதத்தை பரிசீலித்ததன் பின்னரே ஆளுநர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

மிகவும் உணர்திறன் மிக்க சூழலியல் வலயமாகவும் நீரேந்துப் பிரதேசமாகவும் உள்ள ஹந்தான சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டுமென சுட்டிக்காட்டிய ஆளுநர், காணிகளை பிரிப்பது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று குறிப்பிட்டார். (அ)





# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜுலை 27

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு விழா கால புதன் ஒன்றுகூடலில் நேற்று புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்தியசாலை புற்றுநோய் சத்திர சிகிச்சை நிபுணர்களான டாக்டர் க. ஸ்ரீதரன் , டாக்டர் தனுஜா மகேந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

ஆசிரிய மாணவர் சார்பில் கருத்துரையை உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவி பூரணி நிஷாந்தன் ஆற்றினார்.

உடற்கல்வி நெறி ஆசிரிய மாணவர் சி. தினேஷ்குமார் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். (அ)

# பொலிஸ் பொறுப்பதிகாரி செலுத்திய கார் விபத்து!



கொழும்பு, ஜுலை 27

மீகொட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஓட்டிச் சென்ற கார் விபத்துக்குள்ளானதில் அவர் காயமடைந்தார்.

பொறுப்பதிகாரி விடுமுறையில் மொரவக பிரதேசத்தில் உள்ள தனது வீட்டுக்கு நேற்று அதிகாலை 1.30 மணியளவில் பெலவத்தை-நெலுவ வீதியில் 13ஆம் மைல் கல்லுக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கார் வளைவுக்கு அருகில் இருந்த பாதுகாப்பு வேலியில் மோதி வீதியை விட்டு தூக்கி வீசப்பட்டு விபத்துக்குள்ளானதாக கூறப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த பொறுப்பதிகாரி உடுகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை தினியாவல பொலிஸார் மேற்கொண்டுள்ளன. (அ)

# தாதியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட 21 பேர் இன்று இஸ்ரேலுக்கு பயணம்!

கொழும்பு, ஜுலை 27

இஸ்ரேலில் தாதியர் பணிக்கு நியமனம் பெற்ற 21 இலங்கையர்கள் இன்று இஸ்ரேலுக்கு பயணமாகவுள்ளனர்.

இவர்களுக்கு விமான டிக்கெட் வழங்கும் நிகழ்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில், தொழில் அமைச்சர் மனுசு நாணயக்கார தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த தரப்பினரில் 18 பெண்களும் 3 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் இஸ்ரேலின் சனத்தொகை மற்றும் குடிவரவு அதிகார சபை ஆகியவற்றுக்கு இடையில் 2020 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக, இலங்கையர்களுக்கு இஸ்ரேலில் தாதியர் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைவாக கடந்த ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி முதல் இதுவரை 441 இலங்கையர்கள் இஸ்ரேலில் தாதியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இஸ்ரேலியா தாதியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட மேலும் 16 இலங்கையர்கள் எதிர்வரும் 02ஆம் திகதி இஸ்ரேலை நோக்கி பயணிக்கவுள்ளனர். (அ-கே)

# இருவருக்கு இடையில் முறுகல்; தாக்குதலில் ஒருவர் படுகாயம்

கொழும்பு, ஜுலை 27

வத்தளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெரவலப்பிட்டிய பிரதேசத்தில் இருவருக்கு இடையில் நேற்று முன்தினம் (25) இடம்பெற்ற முறுகலில் நபரொருவர் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த நபர் ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, மட்டக்குளிய பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயது இளைஞரொருவரே தாக்குதலில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவரை கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(அ-கே)

# இலங்கையில் ஒலிவ் செய்கை அறிமுகப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 27

இலங்கையில் ஒலிவ் செய்கையை அறிமுகப்படுத்துவதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் ஆலிவ் சாகுபடிக்கு ஏற்ற காலநிலையுடன் கூடிய பிரதேசங்கள் இருப்பதாகவும் அதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்படும் என்றும் விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 19ஆவது அமர்வு இத்தாலியின் ரோம் நகரில் இந்த நாட்களில் நடைபெற்றதுடன் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி விவசாய அமைச்சர் மகிந்த அமரவீரவும் இதில் கலந்துகொண்டார்.



இந்த சந்திப்பின்போது, இலங்கையில் ஒலிவ் செய்கைக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பை பெற்றுத்தருமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர இத்தாலியின் விவசாய அமைச்சரிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, இலங்கையின் மண் அமைப்புக்கு ஏற்ற திராட்சை வகையை அறிமுகப்படுத்துதல், கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துதல், ஆராய்ச்சி நிபுணர்களின் பரிமாற்றம், இத்தாலியிலிருந்து இலங்கைக்கு கால்நடைகளை பரிமாறிக் கொள்வதற்கான ஏற்பாட்டைத் தயாரித்தல், உணவு உற்பத்தித் துறையில் நிலையான அபிவிருத்தி, இலங்கை மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவித்தல் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (அ)

## தமிழ்க் கட்சி எம். பிக்களுடன்...

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் மற்றும் வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டம் குறித்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களின் கருத்துக்களைப் பெறுவதற்காக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டது.

பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம், தனக்கு மாத்திரமன்றி இதற்கு முன்னர் பதவியில் இருந்த நிறைவேற்று அதிகாரமுடைய ஏழு ஜனாதிபதிகளுக்கும் இருக்கவில்லை என்றும் புதிய சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டுக்காக இந்த யோசனைகளை முன்வைப்பது மாத்திரமே தனது கடமை என்றும், இதனை பாராளுமன்றமே நிறைவேற்றவேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்றத்தில் ஒரேயொரு வாக்கை மட்டும் வைத்துக் கொண்டு இதனைச் செய்ய முடியாது என்றும் இந்தப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைவரும் கூட்டாக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒன்பது மாகாண சபைகளில் ஏழு மாகாண சபைகள் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமைந்துள்ளன என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்காலத்தில் மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுக்க எதிர்பார்த்தால், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முதல் பட்டியலில் உள்ள, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய பல விடயங்கள் மத்திய அரசாங்கத்தின் கீழ் இருப்பதாகவும் எனவே அந்த அதிகாரங்களைப் போன்றே விவசாயம் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் கீழ்மட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டுக்கான கொள்கைகளை மத்திய அரசாங்கம் வகுக்க வேண்டுமெனவும், அனைத்து துறைகளிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கு தேவையான வசதிகளை மாகாண சபை வழங்க வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்கள் பதவியை வகித்துக் கொண்டு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அந்தப் பதவியை வகித்தவாறே மாகாண சபை உறுப்பினராக செயல்படுவது தொடர்பில் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,இ.தொ.க பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சீ.வி. விக்னேஸ்வரன், சாகர காரியவசம், டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, கெவிது குமாரதுங்க, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, சரத் வீரசேகர, வண. அத்துரலியே ரத்ன தேரர், வீரசுமண வீரசிங்க, அநுர பிரியதர்சன யாப்பா, லக்ஷ்மன் கிரியெல்ல உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். (அ)

## சர்வகட்சி...

ஒன்று மாகாண சபைத் தேர்தலை நடத்த இணங்கவேண்டும் அல்லது 13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரங்கள் குறித்து பேசவேண்டும் என்று கூறுகிறார்.

இரண்டையும் ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியாது என்பது தான் அவரின் நிலைப்பாடாக இருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமாயின் அதன் அதிகாரங்கள் குறித்து ஏன் கலந்துரையாட முடியாது என்று எங்களுக்கு புரியவில்லை.

எனவே, குறித்த மாநாட்டை நிறுத்துவதற்கு நாங்கள் முடிவு செய்தோம். மாநாட்டின் ஊடாக எந்த பிரதிபலனும் கிடைக்கவில்லை.

நாங்கள் சந்தேகத்துடன் வந்தது போன்றே இங்கு இடம்பெற்றது.

தேர்தல் குறித்து கதைக்கும்போது ஜனாதிபதி அச்சத்துடனேயே இருப்பது எங்களுக்கு தெரியவந்தது.

இந்தக் கலந்துரையாடல் முற்றிலும் அதிருப்தியாகவே அமைந்தது - என்றார். (அ)

## கனடாவின்...

அரசு பழங்குடியின - சுதேசிய உறவுகளுக்கான அமைச்சராக ஹரி ஆனந்த சங்கரி பதவியேற்றுக் கொண்டார்.

கனடாவை ஆளும் லிபரல் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவராக ஹரி ஆனந்தசங்கரி உள்ளார். ஸ்காப்ரோ தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான ஹரி ஆனந்தசங்கரி, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தெரிவு செய்யப்பட்டு வருகின்றார்.

மனித உரிமைகள் சட்டத்தரணியான ஹரி ஆனந்தசங்கரி சமூக ஆர்வலராகவும் தமிழர் விவகாரங்கள் மற்றும் மனித உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றார். இவர் இலங்கையின் மூத்த அரசியல்வாதியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ. ஆனந்தசரியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாட்டை...

ஆரம்பமாகுவதற்கு முன்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுஜன பெரமுனவின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர் கருத்து வெளியிட்ட சாகர காரியவசம்,

நாட்டை பிளவுப்படுத்தும் தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்தால் அதற்கு நாம் ஆதரவளிக்க மாட்டோம். ஜனாதிபதி நாட்டை பிளவுப்படுத்தும் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கமாட்டார் என நம்புகிறோம்" என்றார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கருத்து வெளியிடுகையில், "13ஆவது திருத்தச்சட்டம் பற்றி பேசுபவர்கள் எவரும் இருந்தால் அவர்கள் முதலில் மாகாண சபை தேர்தலை நடத்துமாறே கோரிக்கை விடுக்க வேண்டும்.

மகிந்தவின் காலத்தில் "13" இருந்தும் வடக்கு மாகாண சபை இருக்கவில்லை. அவருக்கு பிறகும் மாகாண சபை இல்லை. ஆகவே, முதலில் தேர்தலை பற்றிதான் பேச வேண்டும்" -என்றார். (அ)

# பிக்குவையும் பெண்களையும் தாக்கிய 9 பேருக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 27

கொழும்பு - நவகமுவ பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றில் பிக்குவையும் பெண்கள் இருவரையும் தாக்கிய சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட 9 பேரும் கடுமையான பிணை நிபந்தனைகளுடன் நேற்று புதன்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இவர்கள் தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய சாட்சிகள்மீது செல்வாக்கு செலுத்தக்கூடாது போன்ற கடுமையான பிணை நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

கடுவலை பிரதேசத்தில் வசிக்கும் 9 பேரே இவ்வாறு சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பிலான வழக்கு நவம்பர் 29ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கடுவலை நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# கெஹலிய கூறிய கருத்துக்கு மருத்துவ சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜூலை 27

எந்தவொரு மருந்தையும் தரம் குறைந்ததாக மதிப்பிடுவதற்கு உத்தியோகபூர்வ வரையறை எதுவும் இல்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அண்மையில் தெரிவித்த கருத்துக்கு இலங்கை மருத்துவ சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன இது தொடர்பில் தெரிவிக்கையில், "இது ஒரு பொறுப்பற்ற அறிக்கை. எனவே, மன்னிக்க முடியாது.

"மருந்துகளின் தரம் போன்ற முக்கியமான விடயத்தில் சுகாதார அமைச்சரின் இத்தகைய அறிக்கையை நாம் எதிர்பார்க்க முடியாது.

இந்த விடயத்தில் அவர் முழுமையாக ஆய்வு செய்திருக்க வேண்டும்" என்று அவர் வலியுறுத்தினார்.

"மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தும் செயல்முறை இருக்க வேண்டும் என்றாலும், மருந்துகளை மதிப்பிடும் செயல்முறை இலங்கையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது எனவும் குறிப்பிட்டார். (அ)

## வலந்தலையில்...

கொண்டவர்கள் ஈகைச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

காரைநகர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், இலங்கை தமிழரசு கட்சி காரைநகர் மூலக்கிளையினர், பொதுமக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர். (அ)

## தேர்தல்...

தேசிய மக்கள் சக்தி மற்றும் பவ்ரல் அமைப்பு என்பன மனுக்களை தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுக்கள் நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் ஏனைய பிரச்னைகளை புரிந்து கொள்ளாமல் உரிய மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மேலதிக மன்றாடியார் நாயகம் பிரியந்த நாவான தெரிவித்தார்.

இந்த நிலையில் மனுக்கள் மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## இலவச சுகாதார...

கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை, வாக்கெடுப்பின்போது தோல்வி அடையும் எனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

" நாட்டு மக்களுக்கு இலவச சுகாதாரத் துறைமீது உள்ள நம்பிக்கையை இல்லாது செய்வதற்கான சூழ்ச்சியே தற்போது இடம்பெற்றுவருகின்றது. இதற்கு இடமளிக்க முடியாது.

சுகாதாரப் பிரச்னைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னிடம் நேரம் கோரியுள்ளனர். " - எனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார். (அ)

## ஜப்பான்...

மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரையும் சந்திக்க உள்ளார்.

2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஜப்பானிலிருந்து இலங்கைக்கு அமைச்சர் ஒருவர் மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும்.

மே மாத இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்து இந்த விஜயமானது இரு தரப்பும் இடையில் மிக முக்கிய சந்திப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ)

## கூட்டமைப்பினர்...

மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் சர்வகட்சி கூட்டத்தில் கலந்துரையாட வேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராயவே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட சரத் வீரசேகர, 'அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அல்ல, புதிய அரசமைப்பை இயற்றுவதற்காகவே நாட்டு மக்கள் ஆணை வழங்கினர். அந்தவகையில் புதிய அரசமைப்புக்கான சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. அது பற்றியே கலந்துரையாடப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் சந்திப்பை கோருகின்றனர். தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் அவர்கள் அல்லர். வடக்கில்கூட அவர்களுக்கு 35 சதவீத வாக்குகளே உள்ளன. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு, தமிழ் மக்களின் நிலைப்பாடு அல்ல." - எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டார். (அ)

## ஆசியாவின்...

கணித்துள்ளது.

ஆசியாவின் சிறப்பாக செயல்படும் நாணயமான ரூபாய் ஆண்டின் முதல் பாதியில் 19 வீதம் அதிகரித்துள்ளது. ஆனால்,ஜூன் மாதத்தில் ஆசியாவின் மிகவும் பலவீனமாக மாறியுள்ளது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வட்டி விகிதங்கள் குறைப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால் ரூபாய் மதிப்பு மேலும் சரியக் கூடும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து இரண்டு வாரங்களில் ரூபாயின் மதிப்பு 6வீதம் குறைந்துள்ளதாக புளூம்பெர்க் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாராளுமன்றை மூடி நாட்டை ரணிலிடமே ஒப்படையுங்கள்!

## கோருகின்றார் வஜிர அபேவர்த்தன



**கொழும்பு, ஜூலை 27**

**பாராளுமன்றத்தை மூடிவிட்டு நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மட்டும் ஒப்படைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப் பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு பாராளுமன்றத்தால் நன்மை செய்ய முடியாவிட்டால் அதனை மூடிவிட்டு அனைத்து அதி காரங்களை ஜனாதிபதிக்கு கைய ளித்துவிடுங்கள். அவ்வாறு செய்வ தன் ஊடாக பாராளுமன்ற பராம ரிப்புக்குச் செல்லும் தொகையும், சம்பளமும் மிச்சமாகும். ஜனாதி பதியால் நாட்டை தனியாக மீட் டெடுக்க முடியும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத் தில் இலங்கை நெருக்கடி நிலையில் இருந்து முழுமையாக மீளும். அதன் பின்னர் இலங்கை படிப்படி யாக கடன் வாங்கும் நாடாக இல்லாமல் உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் நாடாக மாறும்.

நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்த தருணத்தில் நாட் டைப் பொறுப்பேற்க ஒரு தலைவர் இருக்கவில்லை. ஆனால், ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க தனிநப ராக அனைத்து பொறுப்புகளையும் தலையில் சுமந்துகொண்டு மக் களை நெருக்கடியில் இருந்து மீட் டெடுத்துள்ளார்.

அவரால் இந்த நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியும் என்பதை மக்கள் உணர்ந் துள்ளனர். அவருக்கான மக்கள் ஆதரவும் பெருகியுள்ளது.

பாராளுமன்றில் அவரது செயல் பாடுகளுக்கு ஆதரவளிப்பதன் ஊடாக நாடு மேலும் பல நன்மை களையே அடையும்-என்றார். (அ)

# மட்டுவிலில் தனித்திருந்த மூதாட்டி சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 27

தென்மராட்சி, மட்டுவில் பகுதியில் தனிமையில் வசித்த மூதாட்டியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

மட்டுவில், பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு முன்பாக உள்ள வீட்டில் மூதாட்டி தனிமையில் வசித்து வந்துள்ளார்.

நேற்று பகல் அந்த வீட்டுக்கு சென்ற ஒருவர் துர்நாற் றம் வீசியதை அடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்த போது, மூதாட்டி சடலமாக கணப்பட்டார். இவர் சில நாட்களின் முன்னர் இறந்திருக்கலாம் எனக் கருதப்படு கிறது. தம்பையா சரோஜா (வயது-82) என்பவரே உயி ரிழந்தார்.

உயிரிழந்த மூதாட்டி வசித்த வீட்டு காணி தொடர் பான பிணக்கு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார் சம்பவ இடத்திற்குசென்று விசாரணை களை முன்னெடுத்தனர். (அ)

# வவுனியா தாக்குதலில் பலியான பெண்ணின் கணவரும் மரணம்!

வவுனியா, ஜூலை 27

வவுனியா தோணிக்கல் பகுதியில் பிறந்தநாள் விழா நடைபெற்றுக் கொண்டிருந்த வீடொன்றின் மீது தாக்கு தல் நடத்தப்பட்ட சம்பவத்தில், படுகாயமடைந்த மற்றொ ருவரும் உயிரிழந்தார்.

ஏற்கெனவே உயிரிழந்த பெண்ணின் கணவனே உயிரிழந்தார்.

வவுனியாவில் இயங்கும் ரவுடிக் குழுக்களுக்கு இடை யிலான மோதலே இந்தச் சம்பவத்துக்கு காரணமென பொலிஸார் நம்புகிறார்கள்.

சம்பவத்தில் கொல்லப்பட்ட 21 வயதான பாத்திமா சசீமா சைடி என்பவரது ஒன்றுவிட்ட சகோதரரான சுரேஷ் என்பவரது வீட்டிலேயே தாக்குதல் நடந்துள் ளது. சுரேஷும் முதுகில் வெட்டுக்காயத்துடன் வைத்தியசாலையில் உள்ளார்.

தாக்குதல் குழு வீட்டு உரிமையாளரையா அல்லது கொல்லப்பட்டவரையா அல்லது வேறு ஒருவரையா இலக்கு வைத்து வந்தது என்பது இதுவரை உறுதியாக வில்லை. தாக்குதல்தாரிகள் தேடி வந்தவரின் ஏதேனு மொரு வர்த்தகம் தொடர்பிலான முரண்பாட்டின் விளைவாக தாக்குதல் நடத்தப்பட்டதா என்ற கோணத் திலும் விசாரணை நடந்து வருகிறது.

தாக்குதல் நடந்தபோது உயிரிழந்த தம்பதி, வீட்டு அறையொன்றிற்குள் தங்கியிருந்துள்ளனர். வீட்டுக் குள்ளிருந்தவர்களை வெளியே செல்லுமாறு கூறிய தாக்குதல்தாரிகள், யாரும் வெளியே செல்லாததால், வீட்டுக்குள் பெற்றோல் மற்றும் கழிவு எண்ணெய் ஊற்றி தீ மூட்டியது.

தீ பரவியதையடுத்து, அறைக்குள்ளிருந்து உயிரிழந்த தம்பதி வெளியே தப்பியோடி வந்துள்ளனர். எனினும், உயிரிழந்த 21 வயது மனைவி வீட்டை விட்டு வெளியே வரவில்லை. கணவன் சுகந்தன் கடுமையான எரிகாயங்க ளுடன் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார். (அ)

# முட்டை விலை குறைப்பு

கொழும்பு, ஜூலை 27

உள்நாட்டு முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வெள்ளை மற்றும் சிவப்பு முட்டை யின் சில்லறை விலை 55 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

முட்டைக்கான நிர்ணய விலை நீக்கப்பட்டுள்ளமை காரணமாக முட்டை விலை குறைவடையும் என இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அறி வித்திருந்தது.

முட்டைக்கு விதிக்கப்பட்டிருந்த நிர்ணய விலை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நீக்கப்படுவதாக நுகர் வோர் விவகார அதிகார சபை தெரிவித்திருந்தது.

முட்டைக்கு நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்டி ருந்த காலப்பகுதியில் விநியோகஸ்தர்கள் மாத்திரமன்றி முட்டை உற்பத்தியாளர்களும் நெருக்கடிக்கு முகங் கொடுத்ததாக அஜித் குணசேகர கூறினார். (அ)

# கறுப்பு ஜூலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இன்று வியாழக் கிழமை மாலை 4.00 மணிக்கு, கிளிநொச்சி சேவைச் சந்தை முன்றலில் கறுப்பு ஜூலையின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ளது.

கறுப்பு ஜூலை வன்முறையில் உயிர்துறந்த உறவு களை நினைவு கூரும் இந்த நிகழ்வில் அனைத்துப் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நினைவேந்தலில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண முன்னாள் சுகா தார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, ரெலோ தலை வர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப் பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் திருமதி.அனந்தி சசிதரன் உள்ளிட்ட அரசியற் பிரமுகர்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மக்கள் அச்ச நிலையில் வாழ பொலிஸாரே முழுக் காரணம்!

## திலீபன் எம்.பி குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 27

வவுனியா மாவட்டத்திலே மக்கள் அச்சத்தோடு வாழவேண்டிய சூழ்நிலைக்கு முழு காரணம் பொலி ஸாரே என வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங் கம் திலீபன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த இரண்டு மாதங்களாக வவுனியா மாவட் டத்திலே மக்கள் அச்ச உணர்வுக்கு மத்தியில் வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முற்று முழு காரணம் பொலிஸார்

தான். வவுனியா மாவட்டத்திலே இருக்கின்ற நகர பொலிஸ் நிலையம் மற்றும் அங்கு இருக்கக்கூடிய குற்றத் தடுப்புப் பிரிவு இந்த இரண்டிலேயும் மக்களுக் கான நம்பிக்கை தற்போது இழந்த நிலைமையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக இன்று நாங்கள் வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கின்றோம். இது தொடர்பாக ஜனாதிபதியிடமும் முறையிட இருக்கின்றோம். இந்த குற்றச்செயல்கள் கட்டாயம் தடுக்கப்படவேண்டும்.

கடந்த காலங்களில் ஒருவர் அல்லது இரண்டு பேர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டதை அறிந்திருக் கின்றோம். தற்போது பத்து, பதினைந்து பேர் ஒன்றாக சென்று ஒரு

வீட்டுக்குள்ளே புகுந்து வன்முறையில் ஈடுபட்டுள்ள னர். குறித்த சம்பவத்தில் இன்று வரைக்கும் ஒருவர் கூட சந்தேகத்தின் பேரில் கூட கைது செய்யப்படவில்லை

என பொலிஸ் ஊடக பேச்சாளர் கூறி இருக்கிறார்.

எனவே நாங்கள் இவர்கள் எடுக்கக்கூடிய நடவடிக் கைகளை சரிவர கண்காணித்து கொண்டுதான் இருக்கி றோம். சில விமர்சனங்கள் இருக்கின்றது அதனை உரிய இடங்களுக்கு தெரிவிப்போம் - என்றார். (அ)

# சீனா எங்களின் உண்மை நண்பன்

## பாராட்டுகிறார் பாதுகாப்புச் செயலர்



கொழும்பு, ஜூலை 27

இலங்கை மீது சர்வதேச அரங்கில் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டபோது, சீனா உண்மை யான நண்பனாகவே இருந்து,எங்களுக்கு தோள் கொடுத் தது என பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

சீனாவின் மக்கள் விடுதலை இராணுவம் நிறுவப்பட் டதன் 96ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இரு நாடுகளும் தங்களுக்கு இடையிலான அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மதிக்கின்றன. நமது மக் களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், பிராந்திய மற்றும் உலகளாவிய பாதுகாப்பிற்கு பங்களிப்பதிலும் இரு நாடுகளின் ஆயுதப் படைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

சீன மக்கள் விடுதலை இராணுவம் அதன் தொடக் கத்திலிருந்து நவீன மற்றும் சக்திவாய்ந்த சக்தியாக அதன் தற்போதைய கட்டமைப்பு வரை மேற்கொண்ட பயணங்கள் சீனாவின் உறுதிப்பாட்டின் சான்றாகும்.

மேலும், யுத்த காலப்பகுதியில் சீனாவினால் வழங்கப்பட்ட ஆதரவிற்கு எம் நன்றிகள்.

இதேவேளை, இலங்கை மக்களின் நல்வாழ்வுக்கு அர்ப்பணிப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையுடன் கூடிய சீனா பெரும் பங்காற்றியுள்ளது - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.